ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்.
முன்னேற்றத்திற்கு உழைக்கும் மாத இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டுச் சந்தா ரூ. 5] [தனி இதழ் 50 ந. பை.

மலர் 33	செப்டம்பர் 1969	இதழ் 9

ஆசிரியர் திருநாள்

"ஆசிரியர் தொழிலே அரும்பெரும் தொழில்."

"அனைத்துத் தொழில்களுக்கும் அடிப்படை ஆசிரியர் தொழிலே."

"ஆசிரியர்கள் ஆற்றும் பணி ஈடு இணையற்ற பணி."

"எழுத்தறிவிக்கும் இறைவர்கள் ஆசிரியப் பெருமக்கள்."

"வருங்காலக் குடிமக்களை உருவாக்கும் நிகழ்காலச் சிற்பிகள், ஆசிரியர்கள்."

"வளரும் சமுதாயத்தின் முதுகெலும்பு போன்றவர்கள், ஆசிரியர்கள்."

"நாடு வாழவேண்டுமானால் ஆசிரியர்கள் வாழ்ந்தாக வேண்டும். நாடு உயரவேண்டுமானால் ஆசிரியர்கள் உயர்ந்தாக வேண்டும்."

இவையும் இவை போன்ற பிறபாராட்டுரைகளும் ஏராளமாக அளிக்கப்பட்டிருக்கின்றன, செப்டம்பர் 5ஆம் நாளன்று.

செப்டம்பர் 5, டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களுடைய பிறந்த நாள்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள், இந்திய நாடு ஈன்ற இணையற்ற புதல்வர்களில் ஒருவர் மட்டும் அல்ல, தென்னகம் பெற்றெடுத்த தலைசிறந்த தத்துவமேதை மட்டும் அல்ல; அனைத்துலகமும் போற்றும் அறிஞர் பெருந்தகை மட்டும் அல்ல: தன் வாழ்நாள் முழுவதும் ஆசிரியர் தொழிலிலேயே ஈடுபட்டிருந்தவர்; ஆசிரியராக வாழ்ந்து ஆசிரியராக வளர்ந்து, ஆசிரியராகவே பெரும் புகழ் பெற்றுத் திகழ்ந்தவர்: எழுபதுக்கும் மேற்பட்ட முதுபெரும் வயதை அடைந்து வாழ்க்கையின் மாலைப் பொழுதை அமைதியாகவும் அடக்கமாகவும் கழித்துவரும் இன்றைய நிலையிலும் தன்னை ஓர் ஆசிரியராகவே கருதி அவ்வாறே வாழ்ந்து வருபவர்; ஊக்கமும் உறுதியும் தளராத முயற்சியும் இருந்தால் ஓர் ஆசிரியர் வாழ்க்கையில் எவ்வளவு உயர்ந்த இடத்தைப் பெறமுடியும் என்பதற்கு ஓர் ஒப்பற்ற எடுத்துக் காட்டாகத் திகழ்பவர். ஆகையால்தான் அப்பெருமகனுடைய பிறந்த நாள் ஆசிரியர் திருநாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது, சென்ற சில ஆண்டுகளாக.

கடந்து மறைந்த ஆண்டுகளைப் போல இந்த ஆண்டிலும் செப்டம்பர் ஐந்தாம் நாள், ஆசிரியர் திருநாளாக இந்தியத் திருநாடு முழுவதிலும் கொண்டாடப்பட்டிருக்கிறது.

அன்றைய தினம் நாடு முழுவதிலும் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு ஆசிரியர் தொழிலின் அருமை பெருமைகள் எடுத்து விளக்கப் பட்டிருக்கின்றன.

அரசியல் தலைவர்களும் அரசாங்க அதிகாரிகளும் வணிகக் கோமான்களும் தொழில் அதிபர்களும் பத்திரிகை ஆசிரியர்களும் திரைப்பட நடிகர்களும் எல்லாத் துறையினரும் எல்லா நிலையினரும் ஆசிரியப் பெருமக்களை அன்றைய தினம் பாராட்டிப் பேசியிருக்கின்றனர்.

தற்போதைய குடியரசுத் தலைவர் திருவாளர் வி. வி. கிரி அவர்களும், தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களும், அன்றைய தினம் அறிக்கைகள் விடுத்து, ஆசிரியர்களுக்கு சமுதாயம் எவ்வளவு நன்றிக்கடன் பட்டிருக்கிறது என்பதை அழகிய முறையிலும் அழுத்தந் திருத்தமாகவும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

ஆண்டுதோறும் ஆசிரியர் திருநாள் இவ்வாறு விரிவான முறையில் கொண்டாடப்படுவதால், ஆசிரியர்கள் ஆற்றும் பணி எவ்வளவு உயர்ந்த பணி என்பதை நாட்டு மக்கள் அனைவரும் நன்கு உணர முடிகிறது.

பாராட்டு, முழு அளவில் கிடைக்கிறது ஆசிரியர்களுக்கு. இந்த உண்மையை யாரும் மறுப்பதற்கில்லை.

புகழ் மாலைகள், போதும் போதும் என்று சொல்லத்தக்க அளவில் சூட்டப்படுகின்றன ஆசிரியர்களுக்கு. இல்லை என்று இயம்பிவிட முடியாது.

போற்றித் திரு அகவல் மீண்டும் மீண்டும் வாசிக்கப்படுகின்றது ஆசிரியர்களைப் பார்த்து. உண்மைதான். ஐயம் இல்லை துளியும்.

ஆசிரியப் பெருமக்கள் பாராட்டப்படுவதும் போற்றப்படுவதும் பூரிப்புக்கும் பெருமைக்கும் உரிய நிலை என்பதில் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது.

ஆனால் ஆண்டுக்கு ஒரு நாள் திருநாள் கொண்டாடி, ஆசிரியப் பெருமக்களைப் பாராட்டிப் பேசி, மேடையை அதிரவைத்து அப்பால் சென்றுவிட்டால் மட்டும் போதுமா? ஆசிரியப் பெருமக்களுடைய வாழ்க்கை நிலை கணிசமான அளவுக்கு உயரவேண்டாமா? சமுதாயத்தின் பிற பல துறைகளில் வாழ்பவர்கள் எவ்வளவு சிறப்போடும் செல்வாக்கோடும் வாழ்கிறார்களோ அதே அளவு சிறப்பும் செல்வாக்கும் ஆசிரியர்களுக்கும் கிடைக்க வேண்டாமா? ஆசிரியப் பெருமக்கள் பலருடைய உள்ளங்களில் அலைமோதும் கேள்விகள் இவை.

இருபது ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததைவிட ஆசிரியப் பெருமக்களின் ஊதியம் இப்போது கணிசமான அளவுக்கு உயர்ந்திருக்கிறது. அதன் விளைவாக சமுதாயத்தில் அவர்களுக்கு இருக்கிற மதிப்பும் முன்னர் இருந்ததைவிட இப்போது குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததைவிட இப்போது ஆசிரியர்களின் ஊதியமும் மதிப்பும் உயர்ந்திருப்பது உண்மையே என்ற போதிலும், உயர வேண்டிய அளவுக்கு அவை உயர்ந்து விட்டன என்று யாரும் கூறிவிட முடியாது.

நாட்டின் முன்னேற்றம் எப்படிக் கல்வியின் முன்னேற்றத்தைப் பொறுத்திருக்கிறதோ அப்படித்தான் கல்வியின் முன்னேற்றம், ஆசிரியர்களின் முன்னேற்றத்தைச் சார்ந்திருக்கிறது. ஆகவே நாடு சீரான முறையிலும் விரைவான வகையிலும் முன்னேற வேண்டுமானால், சமுதாயத்தில் ஆசிரியர்களுக்கு உள்ள மதிப்பு மேலும் பல மடங்கு உயர்ந்தாக வேண்டும்.

வேறு பல உத்தியோகங்களைப் பெற முயற்சி செய்து, அவையெல்லாம் கிடைக்காமற் போகிற நிலையில்தான் பெரும்பாலோர் ஆசிரியர் தொழிலுக்கு வருகிறார்கள் என்று இப்போது சொல்லப்படுகிறது அல்லவா, இந்தநிலை மாறவேண்டும். ஆசிரியர் தொழிலைப் பெற முயற்சி செய்வது, அது கிடைக்காமற் போகிற நிலையில் தான் பெரும்பாலோர் பிற தொழில்களுக்குச் செல்கிறார்கள் என்று சொல்லத்தக்க புதிய நிலை இனி உருவாகவேண்டும். கல்லூரியிற் பயின்று பட்டம் பெற்று வெளியே வருகிற மாணவர்களில் தலைசிறந்தவர்களைப் பார்த்து, உங்களுக்கு ஆசிரியர் தொழில் வேண்டுமா அல்லது வேறு தொழில் வேண்டுமா என்று கேட்கப்பட்டால், தயக்கம் துளியும் இன்றி அவர்கள், ஆசிரியர் தொழில்தான் வேண்டும் என்று திட்டவட்டமாகச் சொல்லத்தக்க அளவுக்கு நிலைமை மாறவேண்டும்.

என்றைய தினம் சமுதாயத்தில் இத்தகைய நிலைமை உருவாகிறதோ அன்றைய தினம் தான் ஆசிரியர்களின் நிலை போதிய அளவுக்கு உயர்ந்து விட்டது என்று நாம் ஒப்புக்கொள்ள முடியும்.

பெருமையையும் மகிழ்ச்சியையும் அளிக்கத்தக்க அந்த நிலை உருவாக வேண்டுமானால், அரசாங்கம்—பெற்றோர்கள்—ஆசிரியர்கள் ஆகிய மூன்று திறத்தாரின் கூட்டு முயற்சி தேவை.

ஆசிரியர்களின் நிலையை உயர்த்துவதற்கு உரிய பொறுப்பில் கணிசமான பகுதி அரசாங்கத்தையே சாரும். மத்திய அரசு—மாநில அரசு ஆகிய இருவகை அரசுகளும் இத்துறையில் முழு ஆர்வத்துடன் ஈடுபட்டு ஆவன செய்யவேண்டியது அவர்களுடைய தலையாய கடமையாகும்.

தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரி ஆகிய மூவகைக் கல்வி நிலையங்களிற் பணி புரியும் ஆசிரியர்களின் ஊதியங்களை மாநில அரசாங்கம் சிறப்பான அளவுக்கு உயர்த்த வேண்டும்.

உயர்த்தத்தான் விரும்புகிறோம்—உயர்த்துவதுதான் நியாயம்—ஆனால் என்ன செய்வது—உயர்த்துவதற்குத் தேவையான பண வசதி இல்லையே இப்போது என்கிற பழைய பல்லவியை அமைச்சர் பெருமக்கள் மீண்டும் மீண்டும் பாடிக் கொண்டிருப்பதில் பயனில்லை. உயர்த்துவதற்குத் தேவையான பண வசதியை எவ்வாறேனும் திரட்டுவது அவர்களுடைய கடமை. ஆசிரியர்களின் ஊதியத்தைச் சிறப்பான அளவுக்கு உயர்த்துவதற்குத் தேவையான பண வசதியில் ஒரு பகுதியை மாநில அரசு தன் சொந்த முயற்சியால் தேடிக் கொள்வதோடு, மற்றொரு பகுதியை இந்தியப் பேரரசிடமிருந்து மானியமாகக் கேட்டுப் பெறவேண்டும். அத்தகைய உதவியை மாநில அரசுகளுக்கு அளிப்பதற்கு இந்தியப் பேரரசும் முழு விருப்பத்துடன் முன்வர வேண்டும்.

இரு அரசுகளுமாக இணைந்து ஆசிரியர்களின் ஊதியத்தைச் சிறப்பான அளவுக்கு உயர்த்துவதோடு, அவர்களுடைய வீட்டு வசதியையும் கணிசமான அளவுக்கு உயர்த்தவேண்டும். ஆசிரியர்கள் பணியாற்றும் இடங்களுக்கு அருகில் தேவையான வீடுகளைக் கட்டி, அவற்றை அரசாங்கம் ஆசிரியர்களுக்குக் குறைந்த வாடகைக்கு விடலாம், அல்லது பத்து அல்லது பதினைந்து ஆண்டு கால அளவில் தவணை முறையில் அவ்வீடுகளை விலைக்கு வாங்கிக் கொள்கிற உரிமையை ஆசிரியர்களுக்கு அளிக்கலாம். அல்லது மிகக் குறைந்த வட்டிக்கு நீண்ட காலக் கடனை அளித்து ஆசிரியர்கள், தாமே வீடுகளைக் கட்டிக் கொள்வதற்கு வசதி செய்யலாம்.

ஆசிரியர்களின் நிலையை உயர்த்துவது முற்றிலும் அரசாங்கத்தின் பொறுப்பு என்று எண்ணுகிற மனப்பான்மை பெற்றோர்கள் பலரிடம் காணப்படுகிறது. இது தவறு. இத் துறையில் பெற்றோர்களுக்கும் கணிசமான பொறுப்பு உண்டு.

பெற்றோர்கள் எந்தத் தொழிலைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும், ஆசிரியர்களின் நிலையை உயத்துவதற்குத் தங்களால் இயன்ற உதவியைச் செய்யலாம். மாணவர்களாக இருக்கிற தங்கள் பிள்ளைகளிடமும் பெண்களிடமும், ஆசிரியர்களுக்கு உரிய மதிப்பை அளிக்கவேண்டியது எவ்வளவு இன்றியமையாதது என்பதைத் தக்க முறையில் எடுத்துக்கூறி, அவர்களை ஒழுங்கான மாணவர்களாக இருக்கும்படி பார்த்துக் கொள்வது பெற்றோர்களின் சிறந்த கடமைகளில் ஒன்றாகும். அரசாங்கத்தால் நடத்தப் படுகிற ஆசிரியர் நல

நிதிக்குத் தங்களால் இயன்ற நன் கொடையைத் தாமே மனம் உவந்து அளிப்பது போன்ற பிற உதவிகளையும் பெற்றோர்கள் செய்யலாம்.

ஆசிரியர்களின் நிலையை உயர்த்துவற்குள் ஆசிரியர்களே செய்ய வேண்டிய பணிகளும் உண்டு.

ஒவ்வோர் ஆசிரியரும் ஏனைய ஆசிரியர்களைப் பாராட்டி மகிழ்வ தோடு மதிப்பு அளித்து மகிழ்வூட்டும் பழக்கத்தை மேற் கொள்ள வேண்டும்.

தொட்டதற் கெல்லாம் பிற ஆசிரியர்களைக் குறைகூறும் பழக்கம் சில ஆசிரியர்களிடம் காணப்படுகிறது. இந்தத் தவறான போக்கு அறவே கைவிடப்பட வேண்டும்.

பள்ளிக்கூட விழாக்கள் போன்றவற்றிற்குப் பிற பல துறையினரை அழைத்துப் பேசவைப்பது மட்டும்தான் சிறப்பு என்று கருதாமல் பிற கல்விக் கூடங்களைச் சேர்ந்த ஆசிரியர்களையும் அழைத்துப் பேசவைக்க வேண்டும்.

ஆசிரியர்கள் அரும்பாடுபட்டுப் பயின்று தங்கள் கல்வித் தகுதிகளை யும் அறிவாற்றல்களையும் மேலும் மேலும் உயர்த்திக் கொள்ள வேண்டும். ஹையர்கிரேட் ஆசிரியர்களாக இருப்பவர்கள் நன்கு பயின்று, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் வெற்றி பெற்று, செகண்டரி கிரேட். ஆசிரியர்களாக உயரவேண்டும். அதுபோலவே, செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக இருப்பவர்கள் பி ஏ., பி. எஸ்ஸி,, எம். ஏ., முதலிய பட்டங்களைப் பெற்று, பி. டி. பட்டத்தையும் பெற்று, பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக உயர்தல் வேண்டும். புத்தகங்கள் பலவற்றை எழுதி வெளியிடுதல், இலக்கிய மன்றக் கூட்டங்களில் கலந்துகொள்ளுதல் ஒரு குறிப்பிட்ட இலக்கியத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்று அதில் வல்லுநன் என்னும் புகழ் பெறுதல் முதலிய முறைக ளால் சமுதாயத்தில் தங்களுக்கு உள்ள மதிப்பை உயர்த்திக் கொள்ளு தல் வேண்டும். எல்லா ஆசிரியர்களின் நிலையும் உயரும்போது தன் நிலையும் உயரும் என்று எண்ணிப் பொறுமையோடு காத்துக் கொண் டிருப்பதில் பயனில்லை. ஒவ்வோர் ஆசிரியரும் தன் சொந்த முயற்சி

யால் தன் நிலைமையை உயர்த்திக் கொள்வதில் முழு மூச்சுடன் பாடு படவேண்டும்.

ஆசிரியர்கள் தங்களுடைய ஆசிரியப் பணியில் எப்போதும் முழு ஆர்வத்துடன் ஈடுபடவேண்டும்.

ஆசிரியர்களுடைய கோரிக்கைகள் எவ்வளவுதான் நியாயமானவை யாக இருந்தபோதிலும் அவற்றை நிறைவேற்றுவதற்காக நேரடி நட வடிக்கை முதலிய கிளர்ச்சிப் பாதையில் அவர்கள் ஒருநாளும் ஈடுபட லாகாது. மாணவர்களிடத்தில் கட்டுப்பாட்டுணர்ச்சியையும் ஒழுங்கு உணர்ச்சியையும் உருவாக்கி வளர்த்துப் பேணிக் காக்கும் பெரும் பொறுப்பை உடையவர்கள் ஆசிரியர்கள். அத்தகைய பொறுப்பை உடைய ஆசிரியர்களே கட்டுப்பாடின்றி நடக்க எண்ணினால் பின்னர் அவர்களால் எப்படி மாணவர்களிடத்தில் கட்டுப்பாட்டை விளக்க முடியும்? நம் ஆசிரியர்களே வேலை நிறுத்தம் முதலிய கிளர்ச்சிகளில் ஈடுபடும்போது நாம் ஏன் ஈடுபடக்கூடாது என்றல்லவா அந் நிலையில் மாணவர்கள் எண்ணமிடத் தொடங்குவர்?

அதுமட்டுமல்ல—ஆசிரியர்களில் எந்தப் பிரிவினரும் இத்தகைய கிளர்ச்சிகளில் ஈடுபடுவதற்கான இன்றியமையாமை எதுவும் இப்போது இல்லை—ஆசியர்களின் நிலையை உயர்த்துவது மிகவும் அவசியம் என்கிற உண்மையை அரசு மிக நன்றாக உணர்ந்திருக்கிறது. அவர்களின் நிலையை உயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் பலவற்றை அரசு அவ்வப்போது எடுத்துவருகிறது. தமிழகத்தைப் பொறுத்த வரை, பத்து ஆண்டுகளுக்குமுன் அமைக்கப்பட்ட முதலாவது ஊதியக் குழு, பல திற ஆசிரியர்களின் ஊதிய விகிதங்களைக் கணிசமான அளவுக்கு உயர்த்தி அமைத்தது. அதற்குப் பின்னர் ஏறத்தாழப் பதினொரு முறை அரசு ஆசிரியர்களின் அகவிலைப்படியை உயர்த்தித் தந்திருக்கிறது. அரசிதழ்ப் பதிவுறு ஊழியர்களின் அகவிலைப் படி உயர்த்தப்பட்ட போதெல்லாம் ஆசிரியர்களின் படியும் கூடவே உயர்த் தப்பட்டு வந்திருக்கிறது. அண்மையில் இரண்டாவது ஊதியக் குழுவை நியமித்து அரசு வெளியிட்ட அறிக்கையிலும், ஆசிரியர்களின் ஊதிய நிலைகளையும் அந்தக் குழு ஆராய்ந்து தன் பரிந்துரைகளைத் தர வேண்டும் என்று திட்ட வட்டமாக அறிவித்திருக்கிறது.

ஆசிரியர்களின் குறைகளை அரசு நன்கு உணர்த்திருக்கிறது என்பதற்கும், அக்குறைகளைப் போக்குவதற்கு, அரசு தன்னால் இயன்ற முயற்சிகளைச் செய்துவருகிறது என்பதற்கும் ஆசிரியர்கள்பால் அரசு சிறிதளவும் அலட்சியம் காட்டவில்லை என்பதற்கும் இவையெல்லாம் தக்க சான்றுகள்.

இத்தகைய நிலையில் நேரடி நடவடிக்கை முதலிய செயல்களில் ஈடுபட ஆசிரியர்களில் எவரேனும் எண்ணுவராயின் அது இங்கிதம் அற்ற செயலாகவே சமுதாயத்தால் கருதப்படும்.

ஆசிரியர்களின் நிலை இப்போது இருப்பதைவிட மேலும் உயர்த்தப் படவேண்டும் என்பதில் ஐயம் இல்லை. அப்படி உயர்த்தப்படுவதற்குத் தேவையான வசதிகளை, சங்கக் கூட்டங்களில் தீர்மானங்கள் போட்டு அனுப்புதல், அதிகாரிகளையும் அமைச்சர்களையும் பேட்டி கண்டு விளக்குதல், பத்திரிகைகளில் விளக்கக் கட்டுரைகள் எழுதுதல் முதலிய ஆக்க பூர்வமான முறைகளால் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவதுதான் நியாயமே தவிர நேரடி நடவடிக்கை மூலம் கொண்டுவர எண்ணுவது ஆசிரியர்களின் தகுதிக்கு ஏற்ற செயலாக அமையாது.

அரசாங்கம், பெற்றோர்க்ள், ஆசிரியர்கள் ஆகிய மூன்று திறத்தாரும் முழு ஆர்வத்துடனும் பொருத்தமான முறைகளிலும் பணியாற்றினால் ஆசிரியர்களின் நிலை,மிக விரைவில் பாராட்டத்தக்க அளவு உயர்ந்துவிடும். இதில் சிறிதும் ஐயமில்லை.

நீவிர் அறிவீரா?

இயந்திர ஆசான்!

மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு நேரடிப் பயிற்சி தருவதற்காக பிரிட்டனில் கம்ப்யூட்டர் இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு மாணவரிடமும் நிபுணர்கள் சென்று விளக்குவதற்கு பதிலாக அந்த வேலையை இந்த இயந்திரம் செய்துவிடுகிறது.

பயிற்சி டாக்டர்கள் முதலில் செய்ய வேண்டியது நோய்க்கான காரணம் என்ன என்று கண்டு பிடிக்க வேண்டும். நிபுணர்கள் மாணவர்கள் இதனைக் கண்டறியுமாறு செய்கிறார்கள். பின்னர் அவர்கள் கண்டறிந்தது சரியா என்று சோதிக்கிறார்கள். ஆனால் மாணவர்களின் எண்ணிக்கை பெருகி வரும்போது ஒவ்வொரு மாணவராகச் சென்று வருவது நிபுணர்களுக்குச் சிரமமாக இருப்பதால் அவர்கள் கம்ப்யூட்டரைப் பயன்படுத்துகிறார்கள்.

லீட்ஸ் சர்வகலாசாலை மருத்துவர்கள்தான் இதற்கு வழி கண்டு பிடித்துள்ளனர். அவர்கள் கண்டு பிடித்துள்ள இயந்திரம், மாணவர்கள் கேட்கும் கேள்விகளைப்புரிந்து கொள்கிறது; அதற்கான பதில் கூறுகிறது. உடலில் இருக்கும் வலி பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கும் இந்த இயந்திரம், 'எங்கே வலி' என்று கேட்டால், அதில் வலிக்கும் இடத்தைச் சுட்டிக் காட்டும் திறனுடையது இந்த இயந்திரம்.

இப்போதுதான் அறிமுகமாகியுள்ள இந்த இயந்திர மூலம் இது வரை 30 மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இதன் பலனுள்ள உபயோகம் பற்றியும் திருப்தி தெரிவித்திருக்கிறார்கள்.

அதிசய மனிதர்!

'ஜானி எக்' என்பவர் பிறந்த போது, அவருக்குக் கால்கள் இருக்கவில்லை. அரை உடம்பு மனிதராகவே பிறந்தார். அவர் பிறந்து சில மணி நேரங்களிலேயே இறந்து விடுவார் என்று எல்லா டாக்டர்களும் சொன்னார்கள். ஆனால் அவரோ டாக்டர்களின் கருத்தையெல்லாம் பொய்யாக்கி விட்டு பிழைத்துக் கொண்டு விட்டார். பெரிய ஆளாகவும் வளரத் தொடங்கினார்.

கைகளாலேயே நடந்து சென்று பள்ளிக்குப் போனார்; கல்லூரிக்குப் போனார்; 14 வயதிலே பட்டதாரி ஆனார். மிகச் சிறந்த தட்டெழுத்தராகவும் —நாட்டியக்காரராகவும் விளங்கினார்.

எனக்கும் சேர்த்து

வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக காந்தியடிகள் 1931—ல் லண்டனுக்குச் சென்றார். ஐந்தாம் ஜார்ஜ் அரசரை அவர் சந்திக்க ஏற்பாடு ஆகி இருந்தது. நிருபர்கள் "நீங்கள் எந்த உடையில், அரசரைக் காணப் போகிறீர்கள்" என்று கேட்டார்கள்.

"இதே உடைதான்" என்று தமது "அரை நிர்வாண" உடையைக் காட்டினார் காந்தியடிகள். இதைக் கேட்டு அதிருப்தியுடன் முணுமுணுத்த சிலரிடம், "எனக்கும் சேர்த்துத்தான் உங்கள் அரசரும் அரசியும் உடை அணிந்திருக்கிறார்களே போதாதா?" என்றார் காந்திஜி!

வைக்கோல் பேசுகிறது!

நம் நாட்டில் வைக்கோல், மாட்டுத் தீவனம்; ஏழை எளியவர்களின் குடிசையின் கூரையின் மேல் வேயப்படும் சாதனம். அவ்வளவு தான், அதற்கு மேல் வைக்கோலுக்கு நாம் எதுவும் முக்கியத்துவம் அளிப்பதில்லை!

ஆனால் வெளி நாடுகளில் வைக்கோலின் உபயோகம் இத்துடன் மட்டும் முடிந்து விடுவதில்லை. இன்னும் பல காரியங்களுக்காகவும் பயன்படுத்துகிறார்கள்.

வட அயர்லாந்தில், ஒரு வீட்டு வாசலில் சிறிது வைக்கோல் போடப்பட்டு இருந்தால் "ஜாக்கிரதை! நாய்கள் இருக்கின்றன!" என்று எச்சரிப்பதற்கு அடையாளமாகும். ஸ்காட்லாந்தில் வீட்டு வாசல் கதவில் வைக்கோல் செருகப்பட்டிருந்தால் அந்த வீட்டுக்காரன் மனைவியைக் கொடுமைப் படுத்தும் மூர்க்கன்—என்று குறிக்குமாம்!

அதே சமயத்தில் இங்கிலாந்து கிராமப்புறங்களில் ஒரு குடியானவன் தனது தொப்பியில் ஒரு வைக்கோல் துண்டை சொருகிக்கொண்டு சென்றால் 'அவன் வேலையில்லாமல்' இருக்கிறான். வேலை செய்ய அழைத்தால் வேலைக்கு வரத்தயாராக இருக்கிறான்!' என்ற விவரத்தை அடுத்தவர்கள் புரிந்து கொள்வார்கள்.

அதே போல—ஒரு பொருளின் மீது ஒரு சுமை வைக்கோலைப் போட்டு நான்குபேர் பார்க்கிற இடத்தில் வைத்திருந்தால் "அந்தப் பொருள் விற்பனைக்குத் தயாராயிருக்கிறது" என்பதை இங்கிலாந்து நாட்டு விவசாயிகள் புரிந்து கொள்வார்கள்.

இப்படி உலர்ந்த வைக்கோல் கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுவதோடு மனிதர்களுக்கும் பலவித குறிப்புகளை உணர்த்தும் கருவியாகவும் பயன்படுகிறது.

அறுவடையின்போதே மூட்டை கட்டும் புதிய இயந்திரம்

வயல்களில் நெல் அறுவடை—

செய்வதற்கும், அறுவடையின் போதே நெல் மணிகளைத் தனியாகப் பிரித்து கோணிப்பைகளில் போடுவதற்கும் ஒரு புதிய இயந்திரம் பிரிட்டனில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அதாவது டிராக்டர் போல அறுவடைக்கு உபயோகப்படும் ஒரு இயந்திரம், நெல்லை மூட்டையாகவும் கட்டிவிடுகிறது. ஒரே இயக்கத்தில் இருவேலைகளை முடித்து விடுகிறது என்பதுதான் இதன் சிறப்பு.

விவசாயக் கருவிகள் தயாரிப்பில் உலகில் முதலிடம் வகிக்கும்மாஸே பெர்குஸன் என்ற பிரிட்டிஷ் நிறுவனத்தின் தயாரிப்பு இது.

வெள்ள அபாயத்திலிருந்து நகரைக் காக்க தனியாகப் போராடிய எஞ்சினீயர்!

அணை ஒன்று உடைந்து வெள்ள அபாயத்திற்கு சித்தோர்கர் நகர் ஆளாகாமல் காப்பாற்றும் பொருட்டு எஞ்சினியர் ஒருவர் தமது உயிரையும் பொருட்படுத்தாமல் சுமார் 2 மணி நேரம் வெள்ளத் தண்ணீரில் தன்னந்தனியாகப் போராடினார் என்று இங்குத் தெரிய வந்துள்ளது.

காம்பிரி முர்லியா ஆகிய இரு பெரிய அணைகளின் நீர்பிடிப்புப் பகுதியில் ஆக, 16–ல் நல்ல மழை பெய்தது. அணைகளில் ஒரு மணி நேரத்தில் 6 அடி தண்ணீர் உயர்ந்து விட்டது.

பாசன இலாகாவில் உதவி எஞ்சினீயராக இருக்கும் திரு. சுகானி அன்று அலுவலில் இருந்தார். அணைகளில் அணை மட்டம் உயர்ந்துள்ளதால் ஏற்படக்கூடிய அபாயத்தை உணர்ந்த எஞ்சினீயர் தனியாக ஜீப்பை ஓட்டிக்கொண்டு அணைக் கட்டுப் பகுதிக்குச் சென்றார். ஆனால் அணைக் கட்டுப் பகுதிக்கு வெகு தொலைவிலேயே ஜீப் நின்று விட்டது.

அவர் துணிச்சலுடன் வெள்ளத் தண்ணீரில் இறங்கி காம்பிரி அணைக் கட்டுப் பகுதிக்குச் சென்றார். அங்கிருந்து கேங்மேனுக்கு பாதுகாப்பு கேட்கள் உள்ள இடத்தைக் காட்டி தண்ணீரை வெளியே போகச் செய்தார். அணை உடையுமளவுக்கு தண்ணீர் மட்டம் அதற்குள் ஏறியிருந்தது.

அணை உடைந்திருந்தால் சித்தோர்கர் நகருக்கு பேரபாயம் ஏற்பட்டிருக்கும் என்று செய்திக் குறிப்பு கூறியது.

—“தினமணி”

9 தமிழக பள்ளிக்கூட ஆசிரியர்கள் தேசிய விருது பெறுவர்

இந்த ஆண்டு 95 ஆசிரியர்களுக்குத் தேசிய விருதுகள் வழங்கப்படும். இந்த 95 ஆசிரியர்களில் 51 பேர் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள்; 35 பேர் செகண்டரி பள்ளி ஆசிரியர்கள்; 9 பேர் சம்ஸ்கிருத ஆசிரியர்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்த 9 பேர் தேசிய விருதுகள் பெறுகின்றனர்.

1958-லிருந்து இந்த விருதுகள் வழங்க ஆரம்பிக்கப்பட்டன. இந்த 95 ஆசிரியர்களையும் சேர்த்து இதுவரை மொத்தம் 1001 பேருக்கு தேசிய விருதுகள் கிடைத்துள்ளன.

விருது பெறும் ஒவ்வொருவருக்கும் ஒரு தகுதிச் சான்றிதழும் ரு 500 ரொக்கமும் தரப்படும். டில்லியில் நடக்கவிருக்கும் விசேஷ வைபவமொன்றில் இந்த விருதுகள் வழங்கப்படும்.

தமிழ் நாட்டில் தேசிய விருது பெறும் ஆசிரியர்கள் விவரம்; எம். ராமசாமி, சகோதரி டிம்ப்ஞ, எஸ். ஆர். சுப்ரமணிய அய்யர், எம். போற்றிடையா பிள்ளை, (ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள்), சி. பக்கிரிசாமி, வி. டி. ஆப்ரஹாம், எம். அப்துல்கனி சாஹிப், பூஜ்யர் ஏ. மசாடோ, சி. என். மீனாட்சி சுந்தரம்.

"ஆரம்பக் கல்வி" ஆபீஸ்.
94–95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரு. 3-00

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரு. 2-50

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரு. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரு. 1-50

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரு. 2-50

Form of Certificate of income

தபால் செலவு பிரத்தியேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்பத் தபால் செலவு:

25 பாரங்களுக்கு 15 nP.
50 பாரங்களுக்கு 30 nP.
75 பாரங்களுக்கு 50 nP.
100 பாரங்களுக்கு 70 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

ருபாய்க்கு 3 ந. பை. விற்பனை வரியுண்டு.

செய்திச் சுருள்

இசையால் உணவு உற்பத்தி பெருகுமா?

உணவு உற்பத்தியைப் பெருக்க இசையைப் பயன்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா அல்லது இத் திட்டம் பரிசீலனையில் உள்ளதா என்று இன்று தமிழக அசெம்பிளி யில் திரு. என். எஸ். வி. சித்தன் கேட்ட கேள்விக்கு "இல்லை" என்று வேளாண்மைத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து பதிலளித்தார்.

உப கேள்விகளுக்கு மந்திரி பதிலளிக்கையில் அண்ணாமலை பல் கலைக் கழகத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் பூச் செடிகளும் காய் கறிச் செடிகளும், நாதஸ்வரத் தில் சாருகேசி ராகம் இசைக்கப் பட்டதன் விளைவாக அதிக வளர்ச் சியடைவதாகவும் டி. கே. எம். 3-25 நெல் ரக சாகுபடியிலும் சாருகேசியால் நல்ல பலன் ஏற்பட் டிருப்பதாயும் புதுச்சேரியில் ஆங் கில, ஹவாய் ரக இசையாலும், புல்லாங்குழல் இசையாலும் 8 முதல் 58 சதவிகிதம் விளைச்சல் அதிகரிப்பதாகக் கண்டு பிடிக்கப் பட்டதாயும், ஆனால் கோவை விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் சாருகேசி, சகானா ராகங்களை நாதஸ்வரத்தில் வாசித்து சோதனை நடத்தியதில் பலன் ஏற் படவில்லை என்றும் கூறினார்.

கருத்திருமன்: இசையின் மூலம் சாகுபடியைப் பெருக்கும் திட்டத்தை அமுலாக்கி, சங்கீத வித்வான்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க சர்க் கார் முன் வருமா?

மந்திரி: சாருகேசி, சகானா, நவரசகன்னட ஆகிய மூன்று ராகங்களால் தான் பலன் ஏற்படு வதாகக் கூறப்படுகின்றது. ஆகவே இந்த ராகங்களில் வாத் திய இசைப்பதிவு செய்யப்பட்டு இசைத்தட்டுகள் பயன் படுத்தப் படுகின்றன (பரீட்சார்த்த முயற்சி களில்)

எம். எஸ். மணி, தண்டவா ளத்தின் மீது ரயில் ஓடும் போது. ஏற்படுகிற இசையினால் இருபுறமும் உள்ள நெற் பயிர்கள் நன்குவளர்வ தாகக் கூறப்படுகிறதே இது பற்றி சர்க்கார் கருத்து என்ன?

மந்திரி: அது ஆராயப்பட வில்லை.

ஜார்ஜ்: தீவிர சாகுபடி திட்டப் பகுதிகளில் உற்பத்தி யைப் பெருக்க இசை பயன்படுத் தப்படுமா?

மந்திரி: இது ஆராய்ச்சிக் கட் டத்திலேயே இருக்கிறது. அதி லும் கோவை ஆராச்சியின் முடிவு வேறு மாதிரி உள்ளது.

மந்திரி அறிவிப்பு

பின் தங்கியவகுப்பினர் யார்? தமிழக அரசு மறு பரிசீலனை செய்யும்

பின் தங்கிய வகுப்பினர் என்று நிர்ணயிக்கப் பட்டுள்ள ஜாதியின ருக்கும், சமூகத்தினருக்கும் தற்போது அரசாங்கச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. பொருளாதார ரீதியாகப் பின் தங்கிய நிலையில் உள்ள மற்ற வகுப்பினருக்கு இந்தச் சலுகைகள் கிடைப்ப தில்லை. இது சம்பந்தமாக அரசுக்கு கோரிக்கைகள் வந் துள்ளன.

எனவே, பின் தங்கிய வகுப் பினர் என்பதை எந்த அடிப் படையில் நிர்ணயிப்பது என்பது பற்றித் தமிழக அரசு ஆலோசித்து வருவதாகப் பின் தங்கியவகுப்பினர் நல அமைச்சர் திரு. என்.வி. நடரா ஜன் இன்று நிருபர்களிடம் கூறி னார்.

பின்தங்கிய வகுப்பினர் என் பதை ஜாதியை அடிப்படையாகக் கொள்ளாமல் பொருளாதார நிலையை யொட்டி நிர்ணயிப்பதா என்ற கேள்வி எழுந்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

இந்த விஷயம் பற்றிப் புதிதாக பரிசீலனை செய்வது சம்பந்தமாக முதலமைச்சருடன் தாம் கலந்து பேச விருப்பதாக அமைச்சர் கூறினார்

தற்போது பின்தங்கிய வகுப் பினருக்கு வீட்டு மனை வழங்க புறம்போக்கு நிலம் மட்டுமே உபயோகிக்கப் படுகிறது. அது மிகவும் குறைந்த அளவிலேயே கிடைக்கிறது.

எனவே அவசியமான இடங் களில் தனியார் நிலங்களை ஆர்ஜி தம் செய்து பின்தங்கிய வகுப் பினருக்கு வீட்டு மனைகளை ஒதுக்க லாமா என்பது பற்றியும் தாம் பரிசீலனை செய்ய விருப்பதாக அமைச்சர் நடராஜன் கூறினார்.

சென்னை அரசினர் அச்சகத்தில் மிகுதியாக உள்ள அச்சுப்பணி களை சேலம். திருச்சி, விருத் தாசலம் ஆகிய இடங்களில் உள்ள அரசினர் அச்சகங்களுக்குத் தர உத்தேசித்திருப்பதாக அமைச்சர் கூறினார். தற்போது சென்னை அர சினர் அச்சகத்திற்கு மிக அதிக மான வேலைகள் கொடுக்கப்படு கின்றன. அதன் விளைவாக அவற் றில் சிலவற்றை தனிப்பட்ட அச்ச கங்களில் தரவேண்டி வருகிறது என்று மந்திரி சொன்னார்.

தம் வருமானத்தில் பாதியை தேசத்துக்குத் தருகிறார் பிரிட்டிஷ் இளவரசர்

தமக்கு ஆண்டுதோறும் கிடைக் கும் வருமானத்தில் பாதியை தேசத்துக்கே கொடுத்துவிட பிரிட் டிஷ் சிம்மாசனத்துக்கு வாரிசான பட்டத்து இளவரசர் சார்லஸ் அறிவித்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடியால்

பாதிக்கப்பட்டுள்ள பிரிட்டனுக்கு ஆண்டுதோறும் 1,10,000 ஸ்டெர்லிங் (ரூ. 19,25,000) பிரிட்டிஷ் இளவரசரிடமிருந்து கிடைக்கும். நவம்பர். 14ந் தேதி சார்லஸுக்கு 21 வயதாகிறது. அன்றிலிருந்து அவருடைய வருமானத்தில் பாதி பிரிட்டன் அரசுக்குக் கிடைக்கும்.

தென் மேற்கு இங்கிலாந்திலும் லண்டனின் பகுதிகளிலும் இளவரசருக்கு உள்ள சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வாடகையிலிருந்து இந்த வருமானம் வரும்.

கம்யூனிஸ்ட் கருத்து ஊடுருவல் பற்றி நிஜலிங்கப்பா எச்சரிக்கை

கம்யூனிஸ்ட் கருத்துக்கள் தங்களது சிந்தனைகளில் ஊடுருவி விடாதவாறு உஷாராக இருக்கவேண்டும் என்று நாட்டு மக்களை காங்கிரஸ் அக்ராசனர் திரு. நிஜலிங்கப்பா கேட்டுக் கொண்டார்.

தேசிய ஜில்லா பரீஷதும், நகர சபையும் கூட்டாக அளித்த வரவேற்புரைக்கு திரு. நிஜலிங்கப்பா பதிலளித்தார். கம்யூனிஸ்ட் கருத்துக்களை நமது சிந்தனையில் ஊடுருவச் செய்ய முயற்சிக்கப்படுகிறது. இத்தகைய ஊடுருவல் முயற்சி குறித்து இந்நாட்டு மக்கள் உஷாராக இருக்கவேண்டும்.

ஜீவாதார உரிமைகளுடன்கூடிய பிரஜையாக இருக்க நான் விரும்புகிறேன். ஆனால் கம்யூனிஸம் இந்த உரிமைகளை மறுக்கக் கூடியது.

ரஷியாவும், சீனாவும் சுபிட்சமாகவும், மகிழ்ச்சியுடனும் வாழ இந்தியா வாழ்த்துகிறது. ஆனால் நமது கொள்கைகளில் அவை தங்களது செல்வாக்கை பிரயோகிப்பதை நாம் அனுமதிக்க மாட்டோம்.

ஜனநாயக சோஷலிஸம் என்ற லட்சியத்தை நோக்கி காங்கிரஸ் சென்று கொண்டிருக்கிறது. நாம் நிரம்ப சாதித்திருக்கிறோம். இன்னமும் நிரம்ப சாதிக்க வேண்டியிருக்கிறது.

காங்கிரஸ் பலவீனமடைந்தால் நாட்டுக்கு நாசம் ஏற்படும். எனவே காங்கிரஸை வலுப்படுத்துவது மிகவும் அவசியமாகும். காங்கிரஸ் ஸ்தாபனத்தின் ஐக்யத்தைப்பேணிக் காப்பது முக்கியம். தான் மறந்து மன்னிக்கும் தீர்மானத்தை காங்கிரஸ் காரிய கமிட்டி ஏற்றது என்று திரு. நிஜலிங்கப்பா தொடர்ந்து குறிப்பிட்டார்.

—"தினமணி"

ஜனநாயகத்திற்குப் பதில் சோஷலிஸம் வேண்டும் என்பவர்கள் குருடர்கள் என்கிறார் ஸ்டாலினின் மகள்

ரஷிய சர்வாதிகாரியான காலஞ் சென்ற ஸ்டாலினின் மகள் ஸ்வெட்லானா அல்லில்யேவா தனது ரஷிய பாஸ்போர்ட்டை எரித்துக் கொளுத்தி விட்டார்.

தன்னுடைய ரஷிய பிரஜா உரிமையை ரத்து செய்து விடும்படியும் மாஸ்கோவுக்கு எழுதியிருக்கிறார்.

(ஒருவர் அமெரிக்க பிரஜையாக வேண்டுமானால் முதலில் தனது பழைய பிரஜா உரிமையைக் கைவிட வேண்டும்.)

இந்தத் தகவல்களை இன்று ஸ்வெட்லானாவே ஒரு டெலிவிஷன் பேட்டியில் கூறினார்.

"ஒரே ஒரு வருஷம்" என்று ஸ்வெட்லானா ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். செப்டம்பர் 30-ந் தேதி யன்று இது பிரசுரமாகிறது.

கம்யூனிஸம், சோஷலிஸம் ஆகியவற்றில் சுதந்திரம் இருக்க முடியாதென்பதை அப்புஸ்தகம் ருசுப்பிக்கும் என்று தான் நம்புவதாக ஸ்வெட்லானா சொன்னார்.

ஸ்டாலினைப்பற்றிய தன்னுடைய நினைவுகள், இரண்டரை வருஷங்களுக்கு முன்பு தான் அமெரிக்காவுக்குத் தப்பி வந்தது, அமெரிக்காவில் தன்னுடைய வாழ்க்கை ஆகியவைகளைப் பற்றி ஸ்வெட்லானா அந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார்.

வெளி நாடுகளில் உள்ள மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை சோஷலிஸ்ட் நாடுகளில் உள்ளவர்கள் யாவரும் தெரிந்துகொள்ள வேண்டும்; ஆனால் இது எப்படி சாத்தியமென்று எனக்குப் புரியவில்லை என்றார்.

இப்போது எனக்குக் கிடைத்துள்ள புது சுதந்திரத்தைப் பயன்படுத்திக் கொண்டு மேல் நாடுகளில் உள்ள மக்களின் சுதந்திரமான வாழ்க்கையைப்பற்றிமுடிந்த அளவுக்குத் தெரிந்து கொள்ளப் போவதாகக் கூறினார்.

ஜனநாயகத்திற்குப் பதிலாக சோஷலிஸம் வேண்டு மென்று விரும்புபவர்கள் கண்ணில்லாத குருடர்கள் என்றார்.

குருஷ்சேவின் காலத்தில் ரஷ்யாவில்சிறிது சுதந்திரக் காற்றுவீசியது. ஆனால் சென்ற சில வருஷங்களில் நிலைமை மோசமாகி விட்டது.

ரஷ்யாவிலும் நிலைமை திருந்தக்கூடும். இரவுக்குப் பின் காலைப் பொழுது வந்து தானே ஆகவேண்டும் என்று ஸ்வெட்லானா நம்பிக்கை தெரிவித்தார்.

—"தினமணி"

பத்மஸ்ரீ

நெ. து. சுந்தரவடிவேலர் எம். ஏ., எல். டி.,

அவர்கள்

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்
என்னும் உயர்பதவி பெற்றமை அறிந்து
13—9—1969

●

சென்னை உதவிபெறும் தொடக்கப் பள்ளி
நிர்வாகிகள் சங்கத்தார்

✻

மனம் மகிழ்ந்து வாசித்தளித்த

பாராட்டு வாழ்த்து மடல்

கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் மிக்க தலைவரே!

வாழ்க! வாழ்க! இன்று வெள்ளம் போல் திரண்டு வந்திருக்கும் பேரன்பர்களின் கூட்டத்தே கல்வி உலகின் கதிரவனாய் விளங்கும் தங்களை வருக! வருக! என்று பெருமகிழ்வோடு இருகை கூப்பி வரவேற்கிறோம். வாழ்க! வாழ்க! என்று அகம் குளிர—முகம் மலர—வாழ்த்துகின்றோம். 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் வள்ளுவன் வாக்கிற்கு ஒரு நல்ல இலக்கணமாய் விளங்கும் தாங்கள் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் என்னும் பெரும்பதவி பெற்றமைக்காகப் பெருமைப்படுகிறோம்; பெருமிதம் அடைகிறோம்.

கல்வி உலகின் வினோபா அவர்களே!

மக்களுக்குக் கண்ணாக விளங்குவது கல்வி. தொடக்க நிலையிலேயே கல்வி நிலையை உயர்த்தினால்தான் நாட்டின் எதிர்காலக் குடி-

மக்களாகிய குழந்தைகள் தரமும் திறமும் வாய்ந்த மாணவர்களாக மலரக்கூடும் என்ற தத்துவத்தை உணர்ந்தவர் தாங்கள். பொதுக் கல்வி இயக்குநராகத் தாங்கள் பணியாற்றிய காலம் தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்க பெருமையுடையது. கல்விக்குப் பகை பசி. பசியென்னும் பாவி ஏழைக் குழந்தைகளின் கல்விப் பயிற்சிக்கு ஒரு தடைக்கல் என்பதை உணர்ந்து மதிய உணவுத் திட்டத்தைச் சீரிய முறையில் நாடெல்லாம் பரப்பினீர்கள். கோடிக்கணக்கான ஏழைக் குழந்தைகள் வயிறார உணவு உண்டு, மனமாரக் கல்வி கற்று, வாயாரத் தங்களை வாழ்த்துகின்றனர்கள்.

கடல் போன்ற கல்வி நலம் மிக்க சான்றோனே!

தங்கள் அறிவும் அனுபவமும் கடல் போன்றவை. தமிழகத்தே தாங்கள் கொண்டுவந்த சீருணவுத் திட்டமும் சீருடைத் திட்டமும் நம் இந்தியாவுக்கே ஒரு முன்மாதிரியாக விளங்கி, கல்வித் துறையினரின் கவனத்தைக் கவர்ந்தன. மாணவர்கள் வெறும் ஏட்டுக் கல்வியோடு அமையாமல் பல துறைக் கலைவளமும் நிரம்பி விளங்க வேண்டுமென அல்லும் பகலும் அயராது உழைத்தீர்கள். ‘ஏழ்மையினால் இங்கொருவன் கல்வி இல்லை என்றால் எல்லாரும் அதற்காக நாணிடவும்வேண்டும்’ என்னும் பாவேந்தர் பாரதிதாசனாரின் பாடற்பொருள் உணர்ந்து பகுத்துண்டு பல்லுயிரோம்பும் வள்ளுவனாரின் பண்பாட்டை வளர்த்த பெருமகனாராகிய தங்களுக்குத் தமிழகம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது. வள்ளுவன் வரிசை நூல்களும், பூவும் கனியும் என்ற புத்தகமும் எழுத்துலகில் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கின. பள்ளிச் சீரமைப்பில் தாங்கள் கொண்ட பங்கு எங்கள் உள்ளத்தே என்றும் பசுமையோடிக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

பாரதியார் கண்ட பண்புமிகு அண்ணலே!

‘கல்வி சிறந்த தமிழ் நாடு’ என்னும் பாரதியாரின் பாடல் ஏட்டளவில்தான் இருந்தது; பாட்டளவில்தான் இருந்தது. அதனைச் செயலளவில் ஆக்கிய பெருமை தங்களுக்கே உரியது. வீடுதோறும் கலையின் விளக்கமும் வீதிதோறும் இரண்டொரு பள்ளியும் விளங்கச் செய்த வித்தகராகிய தங்கள் கல்விப் பணியைப் போற்றிப் புகழ்வதற்கு ஏடும் போதாது; எழுத்தும் போதாது, ‘திறமான புலமை யெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்’ என்னும் பார

தியாரின் பொன்மொழியை இதய கீதமாகக்கொண்டு அமெரிக்கா, பிரிட்டன், இரஷ்யா போன்ற அயல் நாடுகளுக்கும் சென்று ஆங்காங்கு நம் தமிழகத்தின் கல்வி வளர்ச்சித் திட்டங்களை எடுத்துக் கூறினீர்கள் ; அந்தந்த நாடுகளில் சிறப்பாக விளங்கும் திட்டங்களைத் தமிழகத்திலும் பரவச் செய்தீர்கள்.

தமிழன்னையின் கண்மணியே வாழ்க !

கல்வித் துறையில் தனிச் சிறப்பைப் பெற்ற தாங்கள் தமிழ்ப் புலமையிலும் சிறப்புற்றுத் தமிழ் வளர்ச்சியின் ஆக்கம் கருதிப் பலப்பல சீரிய பணிகளை ஆற்றியுள்ளீர்கள். ஆசிரியர்கள் நல்வாழ்வை எண்ணி அரிய பல சேவைகளைப் புரிந்துள்ளீர்கள். ஆரம்பப் பள்ளி நிர்வாகிகளாகிய எங்கள் குறைகள் பல கேட்டு நிறைவு செய்துள்ளீர்கள் ; தொடக்க நிலைக் கல்வித் துறையில் தாங்கள் புரிந்த சாதனைகள் பல ; மிகப்பல. கல்லூரிக் கல்வித் துறையும் இனி அத்தகைய சாதனைகள் பல பெற்று ஈடும் எடுப்பும் உற்று இனிது விளங்கும் என நம்புகின்றோம். எங்கள் எளிய வேண்டுகோளை ஏற்று இங்கு எழுந்தருளி எங்களை வாழ்த்துவதற்கு முன்வந்த பெருந்தகைமைக்கு நன்றி பாராட்டுகின்றோம் : நல்வணக்கம் கூறுகிறோம். தாங்கள் நீண்ட ஆயுளும் மனவமைதியும் உடல் நலமும் பெற்று வாழ்க வாழ்க என வாயார—உளமார வாழ்த்துகின்றோம். வணக்கம்.

இங்ஙனம் : அன்புள்ள,

சென்னை, 18—9—1969.

சென்னை உதவிபெறும் தொடக்கப் பள்ளி நிர்வாகிகள் சங்கத்தினர்.

உயர்திரு. S. V. சிட்டிபாபு எம். ஏ., எல். டி., அவர்கள்

தமிழ்நாடு கல்வித்துறை இயக்குநராகப் பதவி பெற்றமை அறிந்து

13—9—1969

※

சென்னை உதவிபெறும் தொடக்கப் பள்ளி நிர்வாகிகள் சங்கத்தார்

●

மனம் மகிழ்ந்து வாசித்தளித்த

பாராட்டு வாழ்த்து மடல்

அன்புக்கடலே, அருங்குணக் கல்வி நெறியாளர் அவர்களே !

வாழ்க ! வணக்கம். தற்காலம் கல்வி உலகின் பொற்காலம் என்று பூரிப்புக் கொள்ளுகின்றோம். கல்லாமை இனி இல்லாமை ஆகவேண்டும் என்னும் நல்லுணர்ச்சி எங்கும் பரவியுள்ளது. கல்விச் சுடர் எங்கும் ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. உலகப் பேராசிரியர் திருவள்ளுவரின் இரண்டாயிரம் விழாவும், அன்புநெறி ஆசிரியராம் அண்ணல் காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவும் எங்கும் கொண்டாடப்படுகின்றன. இந்த நல்ல காலத்தில் அறிவும் அனுபவமும் ஆற்றலும் மிக்க தாங்கள் தமிழகக் கல்விநெறியாளர் என்னும் பெரும் பொறுப்பு ஏற்பதை அறிந்து, மனங்குளிரப் பாராட்டுகின்றோம்; வாய்குளிர வாழ்த்துகின்றோம்.

கல்விப் பசிபோக்கும் கருத்துமிக்க கடமை வீரரே !

இளம் பருவத்திலிருந்தே கற்பனவற்றைக் கசடறக்கற்று, ஆங்கிலத்திலும் அருந்தமிழிலும் நாவீறுபடைத்து, ஆசிரியப்பணியை அன்பு

டன் ஏற்றுப் படிப்படியாகப் பதவியில் உயர்ந்து இன்று கல்வி இயக்கு நராகத் தாங்கள் வீற்றிருக்கும் காட்சி எங்கள் கண்ணுக்கும் விருந் தாகும்; கருத்துக்கும் விருந்தாகும். தாங்கள் அமெரிக்கா, ஐக்கிய நாடுகள், பிரிட்டன், ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் சென்று அனு பவமும் மிக்கவர். 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்று பாரதியார் கண்ட கனவை நனவர்க்குவதில் தங்களுக்குப் பெரும் பங்கு உண்டு. காட்சிக்கு எளி யராய்க் கடுஞ்சொல் அற்றவராய்த் தங்களை அணுகும் அனைவர்க்கும் வழி காட்டியாகவும் நண்பராகவும் விளங்கும் தன்மை தங்களிடம் அமைந்த சிறப்பியல்பாகும்.

வழிவழி சிறப்புறும் மாண்பு மிக்குடையீர்!

இன்று நம்மிடையே சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக வீற்றிருக்கும் பத்மஸ்ரீ நெ. து. சுந்தரவடிவேலரின் காலம் கல்வி உலகில் ஒரு மறுமலர்ச்சிக் காலம் அவர்தம் இதயத்தே ஒரு நல்லிடத்தைப் பெற்ற தாங்கள் அவர்தம் கொள்கைகளைக் கடைப்பிடித்து கல்விக்குப் புரியும் தொண்டுகள் சிறந்து மிக்கோங்குக என வாழ்த்துகின்றோம். கல்வி சிறந்த காஞ்சிமா நகரம் பழங்காலத்திலேயே கல்வி நிபுணர்கள டங்கிய பல்கலைக் கழகம் கண்ட பெருமை உடையது. அதனையடுத்த நெய்யாடு பாக்கத்திற் பிறந்த பெருமகனார் பத்மஸ்ரீ நெ. து. சுந்தரவடி வேலர் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக அமைந்தது மிகவும் பொருத்தமே. அவர் தம் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய அறிஞராகிய தாங்கள் கல்வி யியக்குநராகப் பொறுப்பேற்றது எங்கட்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது.

எல்லாரும் இன்புற்று இருக்க நினைக்கும் ஏந்தலே!

பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் அல்லல் நீங்கி மன அமைதியுடன் பணியாற்றும் வகையில் தாங்கள் பேச்சாலும் மூச்சாலும் பணியாற்றி வருகிறீர்கள். அதுபோலவே தொடக்க நிலைப் பள்ளி நிர்வாகிகள் ஒத்துழைப்பிலும் அக்கறை காட்டி வருவது மகிழ்ச்சியளிக் கிறது. குழந்தைகளின் கல்வித்தரம் உயர்வதற்கு ஆசிரியர்கள்—நிர்வாகிகள்—கல்வித்துறை அதிகாரிகள் ஆகியோரின் ஒத்துழைப்பு இன்றியமையாதது என்பதில் ஐயமில்லை. பத்மஸ்ரீ நெ. து. சுந்தரவடி வேலர் காலத்தில் கல்வி சம்பந்தமான சுற்றறிக்கைகளும், நிர்வாகிகள்

சம்பந்தமான சுற்றக்கைகளும், அந்தந்தச் சமயத்தில் நிர்வாகிகளுக்கு நேர்முகமாக அனுப்பப்பட்டதுபோலவே, தங்கள் காலத்திலும் நடைபெற வேண்டுமென நாங்கள் பெரிதும் விரும்புகின்றோம். பொதுத் துறையைவிடத் தனியார் பள்ளித்துறை எந்த வகையிலும் குறைந்ததன்று. நிர்வாகிகளும் கல்வி அதிகாரிகளும் ஒன்று சேர்ந்து நாட்டுக் கல்வி முன்னேற்றத்திற்கு உழைக்கும் வண்ணம் ஆணைகளும் விதிகளும் ஏற்படுத்திச் சிறந்ததொரு சூழ்நிலையை ஏற்படுத்துமாறு தங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகின்றோம். பள்ளி நிர்வாகிகளின் நியாயமான முறையீடுகள் எந்தவகையிலும் புறக்கணிக்கப் படலாகாது என்பதே எங்கள் கோரிக்கை.

வாழி பல்லாண்டு வளம்பல நிறைந்தே !

எங்கள் எளிய வேண்டுகோளுக்கு இணங்கி இவ்விழாவிற்கு வருகை தர இசைந்தமைக்கு என்றும் மறவா நன்றி பாராட்டுகின்றோம். தனியார் நடத்தும் பள்ளிகளின் தரம் உயரத் தாங்கள் கூறும் பொன்னான கருத்துக்களைச் சிரமேற்கொண்டு செயலாற்றுவோம் என உறுதி கூறுகிறோம். தாங்கள் மக்கள், காணி, மனையறம் செழித்துப் பல்லாண்டு பல்லாண்டு பலவளமுடன் வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம். வணக்கம், நன்றி.

இங்ஙனம் :

தங்கள் அன்புள்ள,

சென்னை, 13—9—1969.

சென்னை உதவிபெறும் தொடக்கப் பள்ளி நிர்வாகிகள் சங்கத்தினர்.

ஜனநாயகத்திற்கு ஏற்றபடி நம் கல்வி முறை அமையுமா?

— ஜி. ஸ்ரீநிவாசாச்சாரி —

※

பாரத நாட்டில் இன்று சமூக வாழ்க்கையிலும் பொருளாதார நிலையிலும், கட்சியாட்சியாலும் காணும் குழப்பங்கள் பலப் பல ஆகும். நாடெங்கும் அமைதியின்மை, மூத்தோர் பெற்றோர் முதலியோரின் சொல்லை இளைஞர் புறக்கணித்தல், சாதி, சமயம், மொழி, அரசியல், குறிக்கோள் ஆகிய இவற்றில் உள்ள பற்றுக்களால் தோன்றும் பூசல், கொலை, நாசவேலை, ஆகிய இவையாவும் வேகமாகமாறி வருங்காலத்தின் அடையாளங்கள் ஆகும். இயந்திர நுட்ப விரிவின் வேகத்திற்கு ஏற்றவாறு பண்டைப் பழக்க வழக்கங்கள் மாறவில்லை. சில பிராந்தியங்களில் ஆசிரியரும் கூசாமல் வேலை நிறுத்தம் செய்கின்றனர் என்றால் இம்மாறுதலுக்குச் சான்று வேறு வேண்டுமோ!

அஞ்ச வேண்டுவனவற்றிற்கு அஞ்சாத வரை, அரசியல் அடக்கியாள முடியவில்லையே! "இந் நிலையில் ஜனநாயக ஆட்சிக்கு நம்மவர் தகுதியுடையவரா?" என்று சிலர் மனத் தாங்கலுடன் கேட்கின்றனர். இருபது ஆண்டுகளில் மிக விரைவில் வளர்ந்த ஜனநாயகத்தின் கட்டு திடீர் என்று தளர்ந்து விட்டதா? ஜனநாயகம் நமக்கு ஏற்றதன்று என்று நினைப்பது தவறு. அதன் கட்டும் தளரவில்லை; காலக் கோளாறால் தோன்றும் விகாரங்களுக்கு யார் என்ன செய்ய முடியும்? ஜனநாயகத்தில் நீண்ட அனுபவம் பெற்ற நாடுகளிலும் வாழ்க்கைத் துறையில் அமைதிச் சிதைவைக் காண்கிறோம். புதிதாகச் சுதந்திரம் பெற்ற நாடுகளிலெல்லாம் எத்தனையோ பூசல்கள் இருக்கின்றன. ஒப்பிட்டால் நம் நாட்டில் அபாயநிலை மிகக் குறைவு என்றே கூறல் வேண்டும். அரசியல் சட்டத்தில் (கான்ஸ் டிட்யூஷனில்) குறிக்கப் பெற்றுள்ள அடிப்படையான மானிட சுதந்திரங்களைக் காத்தல் அரசினருக்கும் பொது மக்களுக்கும் பொதுவான இன்றியமையாத கடமையாகும்.

இந்திய வரலாற்றில் முன்பு எக்காலத்திலும் பெறாதவாய்ப்பை இக்காலக் குடிமக்கள் பெற்றுள்ளனர். பல பிரச்சினைகள் அவர்களுடைய சிந்தனையைத் தூண்டி வருகின்றன. 'இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன' என்று சும்மா கிடக்கும் காலம் போய்விட்டது. அரசியலிலும் சமூக வாழ்க்கையிலும் கருத்துக்களை ஏற்கவோ நிராகரிக்கவோ தங்களுக்கு உரிமையுண்டு என்பதை மக்கள் அறிந்துள்ளனர். சிக்கலான பிரச்சினைக்குத் தேர்தல் மூலம் தீர்ப்பு காணப் பகுத்தறிவுடைய வாக்காளர்

தேவை. இப்பகுத்தறிவு தற்கால நிலையில் பள்ளிக்கூடப் படிப்பின் வாயிலாகவே மக்கள் பெற முடியும். ஆதலால் சுதந்திர நாட்டின் சலுகைகளை நல்லபடி பயன்படுத்திக்கொள்ள உதவும் கல்விமுறை இன்றியமையாததாகும்.

"முன்பு படிப்பு எப்படி இருந்தது, இப்பொழுது படிப்பு எப்படி இருக்கிறது பாருங்கள்" என்று ஏங்கி அழுவார் உளர். அவ்வாறு ஏங்க வேண்டிய அவசியமில்லை: ஏக்கத்தினால் ஒரு பயனும் உண்டாகாது. முற்கால தேவை வேறு, இக்காலத் தேவை வேறு. இக்காலத் தேவைக்கு ஏற்றவாறு கல்வி முறை சிறுகச் சிறுக மாறி வருகிறது; மாற்றத்தின் வேகம் பல காரணங்களால் தடைப்பட்டு வருகிறது. "பாடத் திட்டங்கள் தற்காலத் தேவைக்கு ஏற்றவாறு அமைந்துள்ளனவா சொல்லுங்கள்,' என்று கேட்டால், "இல்லை" என்று தான் நான் வருத்தத்துடன் சொல்ல வேண்டியிருக்கிறது.

1955-இல் நான் ஆசிரியனாய்ப் பணியாற்றி வந்த திருமயிலையிலுள்ள பென்னாத்தூர் சுப்ரமணிய ஐயர் உயர்தர பாடசாலையின் ஐம்பதாமாண்டு நிறைவு (தங்க)விழா டாக்டர் ஏ. லக்ஷ்மணஸ்வாமி முதலியார் அவர்களின் தலைமையில் கொண்டாடப் பெற்றது. அப்பாடசாலையின் பழைய மாணாக்கரான திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் (முன்னாள் தமிழ்நாட்டின் முதல் மந்திரியாக இருந்தவர்) சொற்பொழிவாற்றினார்கள். திரு. எஸ். வரதாச்சாரியார் (சுப்ரீம் கோர்ட் நீதிபதியாகவிருந்து ஓய்வு பெற்றுள்ளவர்), இராஜா எம். ஏ. முத்தையா செட்டியார் அவர்கள் முதலியோர் பெற்றோர் சார்பில் பேசினார்கள். ஆசிரியர் சார்பில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. அப்பொழுது நான் ஆங்கிலத்தில் பேசிய பேச்சின் திரண்ட கருத்துஇக்கட்டுரைக்குப் பொருத்தமானது என்று நினைக்கிறேன். அது கீழ் வருமாறு:

"மாணாக்கர் கூடியுள்ள இந்தக் கூட்டத்தில் இக்காலப் படிப்பின் தரம் மிகக் குறைந்துள்ளது என்று கூறுவது சரியன்று. எதில்தரம் குறைந்திருக்கிறது? சுதந்திரத்திற்கு முன் கல்விகற்ற மாணாக்கரைப்போல் இப்பொழுது கற்கும் மாணவர் திறமையுடன் ஆங்கிலம் பேசவோ எழுதவோ முடியவில்லை என்பதுதான் குறை. இக்குறைக்குக் காரணம் ஆசிரியருமல்ல; மாணாக்கருமல்லர்; ஆங்கிலப்பாடத் திட்டத்தை வகுத்தவரே காரணமாவார். மற்றைப் பாடங்களில் இக்கால மாணாக்கர் ஓர் அளவு அதிகமாகக் கற்று வருகின்றனர். மேலும், உலகியல் அறிவு இவர்களுக்கு அதிகம். திரு. வரதாச்சாரியார் அவர்கள் நம்நாடு சுதந்திரம் பெற்ற ஆண்டில் சென்னை நாட்டுக் கல்வி வார விழாவைத் தொடக்கி வைத்த போது பேசுகையில், ஆசிரியருக்குக்கூறிய அறிவுரை நினைவுகூரத்தக்கது. 'நாடு சுதந்திரம் பெற்று விட்டது, ஆயின் ஆசிரியர்கள் தம் சுதந்திரத்தை இழக்க நேரிடுமே என்று அஞ்சு

கிறேன். அதை நீங்கள் முயன்று காப்பாற்றிக் கொள்ளல் வேண்டும்' என்றார்.

உள்ளுணர்ச்சியும் மனப்பான்மையும்

''பள்ளிக்கூடத்தின் வெளிப்புறத்தில் உள்ள சுதந்திரம் பள்ளிக்கூடத்தின் உள்ளே இல்லை. பாடத்திட்டம் யாரோ வகுக்கிறார்கள். அதை இந்த அளவுக்கு இப்படித்தான் கற்பித்தல் வேண்டும் என்று ஆணையிடுகிறார்கள். சுதந்தர நாட்டிற்கேற்றபடி உள்ளுணர்ச்சியையும் மனப்பான்மையையும் மாணுக்கருக்கு ஊட்ட ஆசிரியர்களாகிய எங்களுக்கு உரிமையில்லை'' என்று அப்பொழுது நான் கூறினேன்.

பள்ளிக்கூட ஆசிரியரின் பொறுப்பையும்வேலைத்திறத்தையும் திட்டமாக அளந்து கூறும் வழியோ கருவியோ இல்லை; அவருடைய பணி பொறுப்பு மிகுந்ததே என்பது என் அனுபவ அறிவு படிப்பின் பயனை மாணுக்கர் பெற்று வாழ வழிகாட்டல், நுண்மாணுண் புலனும் பரந்த மனப்பான்மையையும் பெறச் செய்தல் சிக்கலான பிரச்னைகளை நுண்ணறிவோடு தீர்க்கும் தகுதியைப் பெறச் செய்தல் ஆகிய இவையே முக்கிய பொறுப்புக்கள். அறிவு விசுவருபத்தைப் போல் வளர்ந்து வருகிறது. வாழ்க்கை வகையும் வேகமாக மாறுகிறது. ஆதலால் ஒவ்வொரு வட்டத்திலும், பாட திட்டங்களை அவசியம் அடிக்கடி மாற்றியமைக்க வேண்டும். இதனால்தான் மேதாவிகளைக் கொண்ட கமிஷன்கள் கல்வி முறையினை அடிக்கடி விசாரித்து, அரசினருக்கு சிபாரிசுகள் செய்கின்றன.

டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியாரைத் தலைவராகக் கொண்ட கமிஷன் உயர்தர பாடசாலைக் கல்வி முறையைப்பற்றி பல நல்ல சிபாரிசுகளைச்செய்தது. காலத்துக்குத் தக்கவாறு புத்தகப் படிப்புடன் மாணுக்கர் விரும்பும் தொழிலொன்றில் பயிற்சியளிக்க வேண்டும்; ஊக்கத்தையும் உற்சாகத்தையும் நுண்ணறிவையும் தூண்டு தற்கேற்ற புதிய போதனு முறைகளை ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டும் என்று அக்கமிஷன் சிபாரிசு செய்தது. பொருளைச் செலவிட்டு சீர்திருத்த வழியை ஆராயச் செய்த பின்னர், அச்சிபாரிசுகளை ஏற்றுக் கொண்டு செயற்படுத்துவதில் அரசியலார் ஏதோ ஒரு சாக்குச் சொல்லித் தயங்குகிறார்கள்.

1964-66-ல் டாக்டர் கோதாரியைத் தலைவராகக் கொண்ட கமிஷன் பிறப்பு முதல் இறப்புவரை வாழ்க்கைக்கு உதவுங் கல்வி வட்டங்கள் அனைத்தையும் ஆராய்ந்து கண்ட சிபாரிசுகள் அடங்கிய நீண்டதோர் அறிக்கையை வெளியிட்டது. அது இப்போது அரசாங்க பார்வையில் இருக்கிறது. சிபாரிசுகளைச் செயல்படுத்துவதில் உள்ள இடையூறுகள் நீக்கக்கூடியவையே யாயினும் அவை நீங்கப் பெறவில்லை. இந்நிலை மாறுதல் வேண்டும். அது எவ்வாறெனின் பிரிட்டனில் உள்ள நிலையைக் கவனிப்போம்.

பிரிட்டனில் சட்டப்படி அதிகாரம் பெற்ற போர்ட் ஆப்-எஜுகேஷன் என்று நிறுவனம் ஒன்று உண்டு. இந்தப் போர்ட் செய்யும் தீர்மானங்களையே அரசாங்கம் செயல்படுத்த வேண்டும். எந்தக் கட்சி பதவியை ஏற்றாலும், இந்தப் போர்ட் தொடர்ந்து வேலை செய்து வருகிறது. இதைக் கலைத்து விட மந்திரி சபைக்கு அதிகாரம் இல்லை.

நம் நாட்டின் நிலை என்ன? இங்கும் யோசனை கூறும் அட்வைசரி போர்டுகள் இருக்கின்றன. ஆயின் அவை தம் கருத்துக்கள் அனைத்தையும் கூற இயலவில்லை. எதைப் பற்றி யோசனைகேட்கப்படுகிறதோ அதைப்பற்றித்தான் அவை சிபாரிசு செய்ய முடியும். அவை செய்யும் சிபாரிசுகளை மந்திரி ஏற்கலாம். அன்றி நிராகரிக்கலாம். ஆதலால் உண்மையினை உள்ளவாறு துணிந்துரைத்து செயல் படுத்தும் அதிகாரம் பெற்ற போர்டுதான் நன்மையினை விளைவிக்கும்.

"கடுகைத் துளைத்து"

கல்வித் துறை அரசாங்கத்தின் நோக்கம் யாது என்பது நமக்கு இன்னும் விளங்கவில்லை. பிரிட்டனின் அரசாங்கம் தன் நோக்கத்தினை மிக அழகாக கடுகைத்துளைத்துக் கடலைப் புகுத்தியதுபோல் ஒரு சிறு வாக்கியத்தில் தெளிவுபடக் கூறியுள்ளது. அது வருமாறு: "சிறுவர் சிறுமியருக்கு வயது, தகுதி, விருப்பு வெறுப்பு ஆகிய இம்மூன்றுக்கும் ஏற்ப கல்வி கற்பிக்க முயல்வது தான் இவ்வரசாங்கத்தின் நோக்கம்." நம் நாட்டுக் கல்வி முறையில் அம் மூன்றும் நன்கு கவனிக்கப்பெறவில்லை. போர்ட் ஆப் எஜுகேஷனைப் போன்ற நிறுவனத்தை அமைக்க அரசியலாருக்கு விருப்பமில்லையாயின், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உள்ள நிறுவனங்களைப் போல் தேவைக்கு ஏற்றபடி அவற்றினை மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

இனி நாம் என்ன செய்ய வேண்டும்? ஏன் அவ்வாறு செய்யவேண்டும்? என்பதனை ஆராய்வோம். இப்பொழுது கல்வி வட்டத்தில் யார் எதைச் செய்ய வேண்டும் என்ற வரம்பு இல்லை. எல்லாப் பொறுப்பையும் மந்திரி அதிகாரத்திற்குட்பட்ட கல்வி இலாகா செய்து வருகிறது. பொது மக்களுக்கு கல்வி நிர்வாகத்தைப்பற்றிப் போதிய அக்கறை இல்லை. அவர்கள் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் தேறியவர்களின் சத விகிதம் ஒன்றைத்தான் கவனிக்கிறார்கள். மாணுக்கர் பலர் தேர்ச்சி பெருததற்குக் காரணம் என்ன? அவர்களுக்கு எப்படி உதவலாம்? தேறியவர்களுக்கு உத்தியோகங்கள் கிடைக்கின்றனவா? பள்ளிக்கூடத்தில் படித்து முடித்த மாணுக்கரின் நூலறிவின் அளவு யாது? ஏதேனும் தொழிலறிவு உண்டா? மனப்பழக்கம் எத்தன்மைத்து?" என்னும் கேள்விகளையே எழுப்புவதில்லை. பொது மக்கள் சரியான கேள்விகளைக் கேட்டு தக்க சீர்திருத்தத்தைச் செய்ய ஆவன செய்தாலன்றி பள்ளிக்கூடப்படிப்பு விரைவில் திருந்தாது.

கல்வி முறையில் ஒரு பெரிய குறை உண்டு. அது என்ன என்பதை அறிய அரசாங்க நிர்வாகத்தைக் கவனிப்போம். 'இந்தியன் கான்ஸ்டிட்யூஷன், அரசாட்சியின் நோக்கத்தையும்நீதியையும், அதன் அமைப்பையும் பற்றித் திட்ட வட்டமாகக் கூறுகிறது. அரசாட்சி முறையில் முக்கியமான மூன்று பகுதிகள் இருக்கின்றன. பிராந்திய சட்ட சபைகளும், பாராளுமன்றமும் சட்டங்களை நிறுவுகின்றன. மந்திரி சபைகள் அச்சட்டப்படி, உத்தியோகஸ்தர்களின் உதவியைக் கொண்டு அரசாட்சி செலுத்துகின்றன. சட்டப்படி அரசாட்சி நடைபெறுகிறதா ; கான்ஸ்டிட்யூஷனில் உள்ள மக்களுரிமைகளுக்குப் பழுது நேரிடாதபடி சட்டங்கள் இருக்கின்றனவா என்று விசாரித்து, புத்திமதி கூற 'சுப்ரீம் கோர்ட்' உளது. சுருங்கக்கூறின் மூன்று முக்கியமான தனித்தனி நிறுவனங்கள் கூட்டுறவு முறையில் அரசாட்சியை செலுத்துகின்றன. ஆயின், அத்தகைய முறை கல்வி வட்டாரத்தில் இல்லாமைதான் குறை. பிற நாடுகளிலும் இக் குறையுண்டு. அதை நீக்கத்தான் பிரிட்டனில் 'போர்ட்-ஆப்-எஜுகேஷன்' என்ற நிறுவனம் இருக்கிறது.

இனி நாம் என்ன செய்யலாம் என்பதை யோசிப்போம்.

விஞ்ஞான அறிவின் வளர்ச்சியாலும் யந்திரப் பெருக்காலும் அடிக்கடிபாடத் திட்டத்தைசோதித்து மாற்றியமைக்க வேண்டிய அவசியம் உண்டு என்பதை எல்லாரும் ஒப்புக்கொள்ளவேண்டும். இதை ஒப்புக்கொண்டு முதலில் செய்ய வேண்டியது என்ன ?

பாடத் திட்டங்களை வரையறுக்கக் கல்வித் துறைகளில் அனுபவம் மிகுந்த மேதாவிகளைக் கொண்ட ஒரு சிறு சபையை ஏற்படுத்தல் வேண்டும். ஆங்கிலத்தில் இதை, 'கரிகுலம் கௌன்ஸில்' என்பர். "இந்தச் சபையோர் தயாரித்த திட்டத்தைத் தேவைக்கு ஏற்றபடி மாற்றியமைத்துக் கொள்ளும் அதிகாரம் ஆசிரியருக்கு உண்டு ஆனால் மாற்றங்களுக்குக் காரணம் காட்டுதல் வேண்டும்" என்று சொல்லி திட்டத்தைப் பிரசுரிக்க வேண்டும். இரண்டாவதாக பாடத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வர ஆசிரியரின் யோக்கியதாம்சங்கள் இவை, போதிக்க உதவும் கருவிச் சாதனங்கள் இவை, அவற்றைப் பெறும் வகை இன்னது, அவற்றை உபயோகித்து நன்கு பாடங்களைக் கற்பிக்கும் முறை இது என்று ஆசிரியருக்குக் கூறி சரிவர கற்பிக்கப்படுகின்றனவா, என்று மேற்பார்வையிட ஒரு பெரிய நிறுவனம் வேண்டும். தற்காலக் கல்வி இலாகா இந்தப் பொறுப்பை ஏற்க உதவும்.

மூன்றாவதாக பாடத்திட்டங்கள் குழந்தைகளுக்கும் சூழ்நிலைக்கும் தகுந்தவையா இல்லையா ? பள்ளிக்கூடப் பயிற்சியினாலும் பாடத்தாலும் மாணாக்கர் அடையும் நன்மைகள் போதியனவா, அல்லவா ? திட்டத்திலுள்ள மேன்மைகள் யாவை, குறைகள் யாவை,

குறைகளைக்களையும் வழியாது ?—என்பவற்றைச் சோதித்துச்சொல்ல ஒரு தனி நிறுவனம் வேண்டும். இதனை ஆங்கிலத்தில் 'இவால்யுவேஷன் கௌன்ஸில்' என்பர்.

மேற் கூறிய மூன்று நிறுவனங்களே யன்றி அரசாங்க உதவியையும் ஆதரவையும் பெற்ற கல்வியாராய்ச்சிக் குழுக்களும் தேவை. ஆராய்ச்சிக் குழுக்கள் கூறுவதென்ன என்பதை மூன்று நிறுவனங்களும் கவனிக்க வேண்டும். இத்தகைய நிறுவனங்கள் இருந்தால், பொறுப்பேற்போர் தோன்றுவர். இல்லையாயின் பயன்மிகுதி இல்லாத பழைய முறையில் தான் பள்ளிக்கூடக் கல்வி இருந்துவரும். வளர்ந்து வரும் ஜனநாயகத்திற்கு ஏற்ப கல்வி முறை திருத்தி அமைக்கப்படல் வேண்டும்.

—" தினமணி "

****

புதுமுறை சங்க வாய்பாடு

V. K. சேஷாத்திரி, B.A., L.T.

(Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0-13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. [illegible] வீதம் கொடுக்கப்படும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

****

2–வது சம்பளக் கமிஷன்
த. நா. அரசு அமைத்தது

ஊழியர்களின் ஊதியம், படிகளை விரிவாக ஆராயும்

ஸ்தல ஸ்தாபனங்கள், தனியார்
பள்ளிகள் பற்றியும் சிபாரிசு செய்யும்

இரண்டாவது சம்பளக் கமிஷனை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. அதன் தலைவர் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் தலைவராக உள்ள திரு. கே சிவானந்தம் ஐ. ஏ. எஸ்.

சட்ட இலாகா காரியதரிசி டி. எஸ். ராமலிங்கம், ரெவின்யூபோர்டு காரியதரிசி சி. என். ராகவன் அதன் மற்றிரு மெம்பர்களாவார்கள்.

*

இதை இன்று முதன் மந்திரி கருணாநிதி அறிவித்தார்.

ஸ்தல ஸ்தாபன ஊழியர்களுக்கும் அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும் கூட சம்பள விகிதங்களைக் கமிஷன் சிபாரிசு செய்யும்.

கமிஷனிடம் விடப்பட்டுள்ள விஷயங்கள் வருமாறு :—

மாநில அரசின்கீழ் உள்ள எல்லா வகை ஊழியர்களின் தற்போதைய சம்பள விகிதங்கள், கிராக்கிப்படி, மற்ற ஈட்டுப்படிகள், ஓய்வு காலபலன்கள் ஆகியவற்றைக்கமிஷன் விரிவாக பரிசீலிக்கும். அத்தகைய ஊழியர்களின் சம்பள அமைப்பில் அவசியமான. சாத்யமான மாறுதல்களை அல்லது சீரமைப்பை அது சிபாரிசு செய்து, பழைய சம்பள விகிதங்களிலிருந்து புதிய சம்பள விகிதங்களில் பொருத்தத் தக்க முறையை அது சிபாரிசு செய்யும்.

ஸ்தல ஸ்தாபனங்களின் ஊழியர்கள், அரசு உதவி பெறும் பள்களின் ஆசிரியர்கள் ஆகியவர்களின் ஊதியங்கள் மீது அந்த சிபார்சுகள் ஏற்படுத்தும் விளைவை கமிஷன் பரிசீலித்து, அந்த ஊழியர்களுக்கான ஊதிய அமைப்பை கமிஷன் சிபார்சு செய்யும்.

வசதிகள் நிலை

கமிஷன் தன் சிபார்சுகளைக் கூறும்போது, மாநிலம், மற்றும் நாட்டின் பொருளாதார நிலைமையையும், பொதுவாக அபிவிருத்தி திட்டமிடலுக்கு ஏற்படும் தேவைகளையும், குறிப்பாக 4-வது ஐந்தாண்டு திட்டத்துக்குத் தேவைப்படும் மாநில அரசின் வசதிகளையும் கமிஷன் கவனத்தில் கொள்ளும்.

முதலாவது சம்பளக் கமிஷன் சிபார்சுகளை அமலாக்குவதற்கு அரசு அளித்த சலுகைகளையும் கமிஷன் கவனத்தில் கொள்ளும்.

மாநில அரசு கமிஷனிடம் விடும் வேறு எந்த விஷயம் பற்றியும் அது சிபார்சு கூறும்.

மாநில அரசு ஊழியர்களின் சம்பள விகிதங்களை நிர்ணயிக்க முதல் சம்பள கமிஷன் 1959-ல் அமைக்கப்பட்டது. அதன் சிபாரிசுகள் 1960-ல் அமலாக்கப்பட்டன.

இரண்டாவது சம்பளக் கமிஷன் நியமித்து சர்க்கார் உத்தரவு ஒன்றை பிறப்பித்தது. கமிஷன் சாதாரணமாக சென்னை நகரில் கூடும். ஆனால் தேவையை ஒட்டி ராஜ்யத்திற்குள் சுற்றுப் பிரயாணம் செய்யலாம் என்று அறிவிப்பு கூறியது. கமிஷன் தனது விசாரணையை நடத்தத் தேவை எனக் கருதும் விவரத்தை அல்லது அறிக்கையைத் தருமாறு அரசாங்க இலாகாக்கள் கேட்டுக் கொள்ளப்படும். கமிஷனின் மெம்பர் காரியதரிசி உடனடியாக பொறுப்பேற்க வேண்டும் என்று சர்க்கார் விரும்புகிறது. கமிஷன் விரைவில் தனது கூட்டங்களைத் துவக்கி, சிபார்சுகளைத் தெரிவிக்க வேண்டும் என்றும் சர்க்கார் விரும்புகிறது.

தமிழ்நாடு என். ஜி. ஓ. சங்கத் தலைவர் தேவநாதன் இரண்டாவது சம்பளக் கமிஷன் அமைக்கப்பட்டதை வரவேற்றார். விரைவில் அதனிடமிருந்து அறிக்கை பெற்று துரிதமாக சிபார்சுகளை அமலாக்குமாறு அரசை அவர் வற்புறுத்தினார்.

இதற்கிடையில் ரூ. 30 இடைக்கால நிவாரணமளிக்குமாறு அரசை அவர் கேட்டுக் கொண்டார். சம்பளத்துடன் கிராக்கிப்படியை இணைக்கவும் அவர் கேட்டுக் கொண்டார்.

—“ தினமணி ”

ஆசிரியர்களுக்கு திருமணக் கடன்: த. நா. அரசு பரிசீலனை

சென்னை கார்ப்பரேஷன் உள்பட ஸ்தல ஸ்தாபனங்களின் கீழ் வேலை செய்யும் ஆசிரியர்களை, 55-வது வயது பூர்த்தியாவதற்கு முன்பு 3 மாத நோட்டீஸ் கொடுத்து விட்டு, 55—வது வயதுக்கும் 58—வது வயதுக்குமிடையில் "ரிடையர்" செய்யலாமென்று தமிழ்நாடு சர்க்கார் ஜூன் மாதத்தில் உத்திரவு பிறப்பித்தது.

முன்கூட்டி சர்க்காரின் அங்கிகாரத்தைப் பெற்ற பிறகே இம்மாதிரி "நோட்டீஸ்" கொடுக்கலாமென்று சர்க்கார் இப்போது மற்றொரு உத்தரவு பிறப்பித்துள்ளது.

நாளைய தினம் கொண்டாடப்படவிருக்கும் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, கல்வி மந்திரி நெடுஞ்செழியன் விடுத்துள்ள ஒரு செய்தியில் இந்தப் புதிய உத்தரவு பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

55-வது வயதுக்கும் 58-வது வயதுக்குமிடையில் ஆசிரியர்களை "ரிடையர்" செய்யும் அதிகாரத்தை சர்க்கார் மேற்கொண்டுள்ள போதிலும், தற்போது இந்த அதிகாரத்தைப் பயன் படுத்தும் உத்தேசம்சர்க்காருக்கு இல்லையென்றும் அவர் உறுதி கூறுகிறார். ஆனால், திறமையற்றவர்கள் என்று நிரூபிக்கப்பட்ட ஆசிரியர் விஷயத்திலும், மற்றும் ஆசிரியர் தொழிலில் நீடிக்கத் தகுதியற்றவர்களாக இருக்கும் காரணங்களுக்காகவும் மட்டுமே, இந்த அதிகாரம் பயன்படுத்தப்படும் என்கிறார்.

இரண்டாவது சம்பளக்கமிஷன் சர்க்கார் கீழும், ஸ்தல ஸ்தாபனங்களின் கீழும் வேலை செய்யும் ஆசிரியர்களின் சம்பள விகிதங்களை மட்டுமின்றி, சர்க்கார் உதவி பெறும் தனியார் பள்ளி ஆசிரியர்களின் சம்பள விகிதங்களையும் பரிசீலிக்கும். சம்பள விகிதம், கிராக்கிப்படி ஆகியவற்றில் சர்க்கார் ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள், ஸ்தல ஸ்தாபன பள்ளி ஆசிரியர்களுக்கும், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் தானாகவே அமுலுக்கு வந்து விடும் என்றும் திரு. நெடுஞ்செழியன் இதில் கூறுகிறார்.

ஸ்தல ஸ்தாபன பள்ளி ஆசிரியர்களுக்கும், திருமணத்திற்காக கடனுதவி அளிக்கும் திட்டம் சர்க்காரின் தீவிர பரிசிலனையிலிருந்து வருகிறது என்றும் மந்திரி கூறுகிறார்.

இந்தச் செய்தியில் கல்வி மந்திரி மேலும் கூறுவதாவது:-

சில விஷயங்களில் தனியார் பள்ளி ஆசிரியர்கள், சர்க்கார் ஆசிரியர்களையும் ஸ்தல ஸ்தாபன

ஆசிரியர்களையும் விட நல்லநிலைமையில் இருந்து வருகின்றனர்.

அவர்கள் "ரிடையராகும்" வயது 60 ஆக நீடித்து வருகிறது. சர்க்கார் ஊழியர் நடத்தை விதிகளின் கீழ் அவர்கள் வரவில்லை. அவர்கள் வருஷத்துக்கு 15 நாள் ரஜா எடுத்துக் கொள்ளலாம். இதை 45 நாள் வரை சேர்த்து வைத்துக் கொள்ளலாம்.

எல்லா வகை ஆசிரியர்களின் ஊழிய வசதிகள் பற்றி பரிசீலிக்கவும் சர்க்கார் ஒரு கமிட்டியையும் நியமித்திருக்கிறது. அந்தக் கமிட்டியின் அறிக்கைகளை சர்க்கார் கவனமாகப் பரிசீலித்துப் பார்க்கும்.

இதர ராஜ்யங்களில் இல்லாத அனுகூலங்கள் பல, தமிழ் நாட்டிலுள்ள ஆசிரியர்களுக்கு இருந்து வருகிறது. சர்க்காரின் நிதி வசதிக்கு உட்பட்டு, ஆசிரியர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த சர்க்கார் தம்மாலியன்றதையெல்லாம் தொடர்ந்து செய்துவரும்.

—"தினமணி"

முக்கிய அறிவிப்பு

1969-70-ஆண்டுக்கு தொடர்ந்து எமது பாடப்புத்தகங்களை வைத்த எய்டட் ஆரம்பப் பாடசாலை (Aided Elementary Schools) களுக்கு மட்டும் தொடர்ந்து "ஆரம்பக்கல்வி" இனமாக அனுப்பிவைக்கப்படும். மற்றவர்கள் ரூ. 5/- சந்தா அனுப்பினாலன்றி பத்திரிகை அனுப்பப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

குறைந்தது ரூ. 100க்குக் குறையாமல் ஆர்டர்கள் அனுப்ப வேண்டும். ஆர்டர்கள் அனுப்பும்பொழுது, பார்சல் அனுப்ப வேண்டிய (Railway Station) ரயில்வே நிலையத்தின் பெயர், அல்லது (T.V.S. Lorry) நிலையத்தின் பெயர் தெளிவாக எழுதவேண்டும். *மானேஜர்,*

ஆரம்பக்கல்வி நிலையம்

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்,

94-95, புதுத்தெருவு, மண்ணடி, சென்னை-1.

நிலாவில் கால் வைத்த முதல் மனிதன்!

[வால்ட்டர் ஃபிராலிக்]

●

நடப்பு ஆண்டு முடிவில், இந்த ஆண்டுச் செய்திகளில் அடிபட்ட பெயர்களிலெல்லாம் தலைதூக்கி நின்றது எது என்று கணக்கெடுத்தால், நீல் ஆல்டென் ஆம்ஸ்ட்ராங் பெயர்தான் முதலில் வந்து நிற்கும் என்பதற்கு ஐயம் இல்லை.

இன்னும் 30 ஆண்டுகள் கழித்து, இந்த நூற்றுண்டு முழுவதையுமே கணக்கெடுத்தாலும், அவர் பெயரே முதலில் வரும் என்பது திண்ணம். ஏன், இந்த ஓராயிரம் ஆண்டுகளைக் கணக்கெடுத்தாலும், அவரே "ஆயிரம் ஆண்டுக்கு ஒருவர்" என்று பெயர் பெறுவார்.

சந்திரனுடைய தரையிலே கால் வைக்கின்ற முதல் மனிதன் ஒரே ஒருவனாகத்தான் இருக்க முடியும். அந்தத் தனிப் பெருஞ் சிறப்புக்கு உரியவர் ஆகின்றார், நீல் ஆல்டென் ஆம்ஸ்ட்ராங். அதன் பயனாக, இந்த ஆண்டிலும், இந்த நூற்றுண்டிலும், இந்த ஓராயிரம் ஆண்டுக் காலத்திலும், புதுமைப் பெருஞ்செய்தி ஒன்றின் நடுநாயகமான வீரராகின்றார் அவர்.

அவருடைய அருஞ் செயல்களைப் பற்றி இனித் தலைமுறை தலைமுறையாக எண்ணிறந்த குழந்தைகள் கதை கதையாகப் படித்தறிவார்கள். இனிமேல் மனிதன் சந்திரனுக்கு அப்பால் எவ்வளவு தூரம் விண்வெளிப் பயணம் சென்றாலும் சரி, பூமியிலிருந்து கிளம்பி இன்னொரு இயற்கைக்கோளில் அடியெடுத்து வைத்த முதல் மானிடன் ஆம்ஸ்ட்ராங் என்ற பெயர் அழியவே அழியாது.

தோற்றமும் பெயரும்

அடக்க ஒடுக்கமானவர்: ஒல்லியும் அல்ல; தண்டியும் அல்ல; ஆள் தோற்றத்தைக் காட்டிலும் அவர் பெயர்தான் இவர் ஒரு விண்வெளி வீரர் என்பதற்கு மிகவும் பொருத்தமாகத் தோன்றும். ஆம், ஆம்ஸ்ட்ராங் என்றால் தோள் வலிமை மிக்கவர் என்றுதானே பொருள்?

இவர் உயரம் 5 அடி 11 அங்குலம்; எடை 165 ராத்தல். நீல நிற விழிகள்; கூரிய பார்வை; குறுக வெட்டிய பொன்னிறத் தலைமுடி. வயது 39. மணமானவர். 12 வயது மகன், எரிக்; 6 வயது மகன், மார்க்.

பொதுவான இந்த விவரங்களுக்கு அப்பால் ஒளிந்திருக்கிறார் அரியதோர் வீரர்.

விண்வெளியைக் கடந்து வேறு கோள்களையும் பிடிக்க வேண்டும் என்று மனிதனுக்கு இருந்து வரும் நெடுநாளைய ஆவல் வேறு எந்த விண்வெளி விமானியையும் விட நமது ஆம்ஸ்ட்ராங்கிடமே தலை தூக்கி நிற்கிறது என்றால் மிகையாகாது.

பறக்கப் பிறந்தவர்

வானில் பறப்பதென்றால், மற்றேதும் வேண்டாம். சிறுவன் ஆம்ஸ்ட்ராங் பறப்பது குறித்து அன்று தோன்றிய ஆர்வம் வயது ஆக ஆகத் தானும் வளர்ந்து ஆல்போல் பரந்து விரிந்து படர்ந்து விட்டது. அவர் பெரியவர் ஆன பிறகு பெரும்பாலும் வாழ்க்கை முழுவதுமே, மேலும் மேலும் உயரப் பறக்க வேண்டும் இன்னும் இன்னும் வேகமாகப் பறக்க வேண்டும் என்ற ஒரே குறியாகவே இருந்து வந்துள்ளது. பறக்கும் வித்தையில் மனிதன் முன் அறியாதன பல இவர் முயற்சிகளால் துலங்கியுள்ளன.

நீல் ஆம்ஸ்ட்ராங், "நாஸா" எனப்படும் அமெரிக்க விண்வெளி நிலையத்தில் விண்வெளி விமானி ஆனது 1962 செப்டம்பர் மாதம். ஆனால் அதற்கு முன்பே "நாஸா" வின் எக்ஸ்-15 என்னும் ஏவுகணை விமானத் திட்டத்தில் பணியாற்றிய தலை சிறந்த சோதனை விமானிகளில் ஒருவராக அவர் விளங்கினார். ஏவுகணை இயந்திரத்தால் இயங்கும் விமானங்களை வாயு மண்டல உச்சிக்கே கொண்டு செல்ல வேண்டும் என்பதே எக்ஸ்-15 திட்டம்.

ஆம்ஸ்ட்ராங் 1962 ஏப்ரல் 20ம் தேதி எக்ஸ்-15 விமானம் ஒன்றை ஏழாவது தடவை ஓட்டிச் சோதித்தபோது, 2,07,500அடி அதாவது கிட்டத்தட்ட 40 மைல் உயரம் சென்றார்; விமானம் ஒன்று அவ்வளவு உயரம் சென்றது அரிது. விண்வெளி விமானியாகப் பயிற்சி பெறுவதற்கு முன்பு அவர் கடைசியாகப் பறந்த எக்ஸ்-15 விமானத்தை மணிக்கு 3,989 மைல் வேகத்தில் ஓட்டினார்; ஒலியின் வேகத்தைப் போல் ஏறக்குறைய ஐந்து மடங்கு வேகம் இது.

கருவியின்றிக் கையால்

விநாடிக்கு ஏறக்குறைய 1·11 மைல் வேகத்தில் பறந்து கொண்டிருந்தபோது அவர், விமானத்தின் பக்கவாட்டு அசைவினைக் கட்டுப்படுத்திய கருவியை வேண்டும் என்று நிறுத்தி விட்டு, தம் கையால் அந்த அசைவினை கட்டுப்படுத்தலானார்; அதனால் விளைந்த அடிகளையும் தாங்கிக் கொண்டு, விமான இயல் விஞ்ஞானத்தின் பொருட்டு, அவர் இவ்வாறு அவ் விமானத்தை இயக்கி, ஓர் உண்மையை நிலைநாட்டினார். அதுதான் விண்வெளிக் கப்பலில் பூமியின் வாயு மண்டலத்துக்குள் மீண்டும் வந்து இறங்கும் விமானி, மின்னணுக் கருவிகளின் உதவியில்லாமல் போகும் நிலைமை நேர்ந்தாலும் கூட அக்கப்பலின் இயக்கத்தைத்தானே கட்டுப்படுத்திச்

செலுத்திட முடியும் என்ற உண்மை.

பெயர் பெற்ற விமான வகைகள் பலவற்றை வெள்ளோட்டம் விட்டு நுட்பமாகச் சோதித்தவர் ஆம்ஸ்ட்ராங். எஃப் 100, எஃப்-101, எஃப்-102, எஃப்-104 எஃப்-5டி, பி. 47 என்பன அவ்விமானங்களுள் சில. பாரசூட் குடை வடிவச் சறுக்கு விமானம் ஒன்றையும் அவர் வெள்ளோட்டம் விட்டுச் சோதித்துள்ளார். பி. 29 என்னும் மாபெரும் விமானத்தையும் நூறு தடவைக்கு மேல் ஓட்டியிருக்கிறார்; அவ்விமானம் பறக்குங்கால் அதிலிருந்து சிறிய ஏவுகணை விமானங்கள் செலுத்தப்பட்டன.

கண்டம் தப்பினார்

முன்னோடி விமானிகள் பலரையும் போலவே ஆம்ஸ்ட்ராங் சில கண்டங்களிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பியிருக்கிறார். அத்தகைய ஒவ்வொரு வேளையிலும் இவர் ஒரு நொடியும் பிசகாமல் சரியான காரியங்களைச் செய்து தப்பினார்.

1966 மார்ச் 16ந் தேதி இவர் ஜெமினி-8 விண் வெளிக் கப்பலில் தலைமை விமானியாக இருந்தார். அதுதான் இவருடைய முதல் விண்வெளிப் பயணம். அதுபோது இவரும் இவருடையதுணை விமானி டேவிட் ஆர். ஸ்காட்டும் தமக்கு முன்பே விண்வெளியில் செலுத்தப்பட்டிருந்த வெற்று விண்வெளிக் கலம் ஒன்றோடு தங்கள் கலத்தைச் சரிவர இணைத்து, உலகிலேயே அதற்கு முன்யாரும் செய்யாத அருஞ்செயலைச் செய்து முடித்தனர். ஆனால் உடனே அவர்கள் கலத்தில் ஒரு கோளாறு முளைத்தது.

ஜெட் விசை யந்திரம் ஒன்று சரிவர இயங்காததால் ஜெமினி-8 விண்வெளிக் கலம் கட்டுக்கு அடங்காமல் கண்டபடி குட்டிக் கரணம் அடிக்கத் தொடங்கியது. ஆயினும் இயந்திரங்களின் இயல்பை இயற்கையாகவே உணர்ந்ததுபோன்ற நுண்ணறிவினாலும், ஆபத்துக்கு அஞ்சாமல் நெடுங்காலமாகத் துணிந்து செயலாற்றிய பழக்கத்தாலும், விண்வெளி விமானிகள் சற்றும் நடுங்காமல் தங்கள் கலத்தைச் சரிப்படுத்தி விரைவில் பத்திரமாகப் பூமிக்குத் திரும்பினர்.

சென்ற ஆண்டுங்கூட ஆம்ஸ்ட்ராங் இன்னொரு கண்டத்திலிருந்து தப்பினார். 1969 மே 7ந் தேதி, அவர் நிலாத் தரையில் இறங்குவதற்குரிய நிலா வாகனம் போன்ற பயிற்சிக் கலத்தில் பறந்து வந்து இறங்க முயன்றபோது சில நூறு அடி உயரத்தில் அதன் இயந்திரம் மும்முரமாக இயங்கத் தொடங்கிவிட்டது; சில விநாடிகள் தாமதித்தால், அவரும் அதனோடு விழுந்து நொறுங்கியிருப்பார். ஆனால் கலங்காத மனம் படைத்த ஆம்ஸ்ட்ராங் தம் இருக்கையோடு வெளியே பாய்ந்து பாரசூட் குடை உதவியால் பத்திரமாகத் தரையில் இறங்கினார்.

பயிற்சிக்கலம் விழுந்து நொறுங்கி எரிந்து தீய்ந்தது.

ஐந்தில் வளேந்தது

வீரர் ஆம்ஸ்ட்ராங் பிறந்தது அமெரிக்காவில் மத்திய மேற்கு பகுதியில், ஒஹாயோ மாநிலத்தில் வாப்பக்கொனேட்டா என்ற ஓர் ஊரில் 1930 ஆகஸ்டு 5ம் நாளாகும். அவ்வூரின் பெயர் அவ்வூராருக்கே எளிதில் வாயில்நுழையாது. அவர்கள் அதனை "வாப்பக்" என்றே வழங்குகிருர்கள். ஆம்ஸ்ட்ராங்கின் தந்தையார் மாநில அரசியல் கணக்குத் தணிக்கையாளராக இருந்தார். ஆம்ஸ்ட்ராங்குக்கு ஐந்து வயது இருக்கும்; அவ்வூருக்குப் பழங்காலத்து மூன்று இயந்திர ஃபோர்டு விமானம் ஒன்று வந்தது. அதில் ஏறிப் பறக்க வேண்டுமென்று தனயன் தந்தையைக் கெஞ்சினன். இருவரும் ஏறிச் சுற்றிப் பறந்தனர். தந்தைக்கோ அச்சம்; ஆனல் மகனுக்கு அன்று முதல் எப்போதும் ஆகாய விமானத்தைப் பற்றியே நினைப்பு!

ஆம்ஸ்ட்ராங் விமானங்களேப் பற்றிய புத்தகங்களேப் படித்தார்; பொம்மை விமானங்கள் செய்தார். வானத்தில் ஒரு விமானம் பறந்துவிடக் கூடாது; அண்ணாந்து பார்த்தவண்ணம் இருப்பார். நாளடைவில் விமானம் பற்றிய பொறியியல் கற்று பி. எஸ்ஸி. பட்டம் பெற்ருர். அமெரிக்கக் கடற்படை விமானியாகச் சேர்ந்து கொரியப்போரில் 78 தடவை போர்க் களம் கண்டார். அதன் பின் புது விமானம் படைப்பதற்கு உதவும் ஆராய்ச்சி விமானி ஆனுர்.

இலேசான விமானங்கள், சறுக்கு விமானங்கள் ஓட்டுவதைத் தமது பொழுது போக்காகக் கொண்ட ஆம்ஸ்ட்ராங் ஆராய்ச்சிச் சோதனை விமானிகள் சங்கத்தின் சாசன உறுப்பினர் ஆனுர்.

பரிசுகள் பல

ஆம்ஸ்ட்ராங் பெற்றுள்ள சிறப்புக்களும் பரிசுகளும் பல. அவற்றுள் மிகச் சிறந்த ஒன்று "ஆக்டேவ் கான்யூட்" பரிசு 1962-ல் அவருக்குக் கிடைத்தது. அது அவர் விண்வெளி விமானி ஆவதற்கு முன்பாகும். விமான விண்வெளி விஞ்ஞானங்கள் பற்றிய அமெரிக்கக் கழகம் அவ்வகை விஞ்ஞானங்களுக்கு மிகச் சிறந்த பணி புரிந்தவர்களே ஆண்டு தோறும் பொறுக்கியெடுத்து வழங்கும் பரிசு அது.

இவ்வளவெல்லாம் சிறப்புப் பெற்றிருந்தாலும், ஆயிரக் கணக்

கான மக்கள் தோள் கொடுத்துத் தான் ஆம்ட்ஸ்ட்ராங் அம்புலி சென்று தம் அடிச் சுவட்டை அதன் தரையிலும் வரலாற்றின் அழிவிலா ஏடுகளிலும் பதிய வைக்க முடிகிறது.

பல்லோர் உழைப்பு

விண்வெளிக் கலம்,விண்வெளிக் கலத்தை மேலே செலுத்தும் சாதனங்கள், விண்வெளிப் பயணத் தொழில் நுட்பம் ஆகியவை எல்லாம் கண்டுபிடிக்கப் பட்டு உருவாவதற்குக் கிட்டத் தட்டக் கடந்த பத்து ஆண்டுகளாக 4,00,000 மக்கள் 20,000 அமெரிக்கத் தொழிற்சாலைகளிலும் பல் கலைக் கழகங்களிலும் உழைத்திருக்கின்றனர். என்பதை மறத்தல் கூடாது.

ஆளிருந்து செல்லும் அமெரிக்க விண்வெளிப் பயணங்கள் இதற்கு முன் 20 நடந்திருக்கின்றன. ஆளில்லாத அமெரிக்கச் செயற்கைக் கோள்கள் அம்புலியை அணுகி லட்சம் புகைப்படங்களுக்கு மேல் எடுத்தனுப்பியுள்ளன, நிலாத் தரையின் அமைப்பு எப்படிப்பட்டது. அங்கு இறங்கத்தக்க இடங்கள் எவை எவை என்றெல்லாம் அறிய இப் படங்கள் பெரிதும் உதவியுள்ளன. இவை எல்லாம் சேர்ந்து தான் இன்று மனிதன் அம்புலியில் கால் எடுத்து வைக்க வகை செய்துள்ளன என்பதனையும் நினைவில் வைக்க வேண்டும்.

பல நாடுகளையும் பல காலங்களையும் பல நூற்றாண்டுகளையும் சேர்ந்த விஞ்ஞான மேதைகள் பலருடைய விஞ்ஞான ஊகங்கள், ஆராய்ச்சிகள் இவற்றின் விளைவாக மலரும் வெற்றியே அம்புலியை அடைகின்ற இந்த மகத்தான விண்வெளிப் பயணம் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

விண்வெளி விமானி நீல் ஆல்டென் ஆம்ஸ்ட்ராங் அம்புலியின் தரையில் நிற்கின்றார் என்ற செய்தி உலகமெங்கும் பறந்த போது அச் செய்தியில் அடங்கியிருந்த சாரமெல்லாம், முந்திய காலங்களில் மக்களுடைய கனவாக மட்டும் இருந்தது. இந்த இருபதாம் நூற்றாண்டு மனிதன் ஒருவன் மூலமாக நனவாகிவிட்டது என்பதேயாகும்.

—" தினமணி "

கம்யூனிஸம்: மார்க்ஸ் எதிர்பார்த்ததும் ரஷியாவில் உருவானதும் என்ன?

— ஏ. என். எஸ். —

*

கார்ல் மார்க்ஸ்தான் கம்யூனிஸத்தின் "தந்தை" அல்லது "தீர்க்கதரிசி" அவர் ஓர் பேரறிஞர் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படும் விஷயம். தொழில்களின் 'மூலதனம்' (Capital) என்று ஒன்று தேவையாகும் பொழுது தொழிலாளியின் உழைப்பின் பயனில் ஒரு பகுதி தான் தொழிலாளிக்குப் போய்ச் சேரும். ஒரு பகுதி மூலதனம் போட்டுத் தொழிற்சாலை நடத்துவோருக்குப் போய் விடுகிறது. 1848ல் தொழிலாளரின் வேலை நேரம் குறைக்கப்பட வேண்டும் என்ற இயக்கம் தோன்றின போது, கார்ல் மார்க்ஸ் "தொழிலாளி 5 மணி நேரம்தான் தனக்காக உழைக்கிறான். மீதமுள்ள நேரம் முதலாளிக்காக உழைக்கிறான்" என்று சொன்னார். அது சுமார் 120 ஆண்டுகளுக்கு முன்னர். கார்ல் மார்க்ஸ் சொன்னதில் உண்மையுண்டு. முதலாளி என்ற சொல்லுக்குப் பதிலாக "மூலதனம்" என்ற சொல்லை அவர் உபயோகித்திருந்தால் அது உண்மைதான்.

இப்போது "மார்க்ஸ்" தாம் எடுத்துரைத்த இந்த உண்மையிலிருந்து மற்றொரு விளைவை எதிர்பார்த்தார். அதாவது இது நிமித்தமாக முதலாளிக்கும்-தொழிலாளிக்குமிடையே ஏற்படக்கூடிய உறவு என்ன? "பரஸ்பரப் போர்" தான் அதன் விளைவாகும் என்று நினைத்தார். அவர் "வர்க்கப்போர்" (Class war) என்ற சொற்களை உபயோகிக்கவில்லை. —Klassenkampf -(கிளாஸன் காம்ஃப்) என்ற சொல்லையே உபயோகித்தார். காம்ப் என்ற சொல்லுக்குப் "போராட்டம்" என்று பொருள். (உதாரணமாக ஹிட்லர் எழுதிய புத்தகத்திற்கு Meinkampf என்றே பெயர் கொடுத்தார்) அதாவது முதலாளி, தொழிலாளி வர்க்கப் போராட்டம் விளையும் என்று கார்ல் மார்க்ஸ் கூறினார்.

இந்த வர்க்கப் போராட்டம் முதலாளித்துவ அமைப்பில் தவிர்க்க முடியாத ஒன்று என்று அவர் கருதினார்.

அது அந்தக் காலம்

அன்றிருந்த நிலையில் அது சரிதான். அவரது நூல் 1859க்கும் 1865க்குமிடையே எழுதி

1867ல் பிரசுரமானது. அன்றைய நிலையில் அவர் சொன்னது சரிதான்.

குடிசைத் தொழில்கள் யாவும் எடுபட்டுப் போய் தொழிற் சாலையை நம்பித்தான் பலர் வாழ வேண்டும் என்ற நிலைமைஏற்பட்டு வந்தகாலம் அது. தொழிலாளர் அடிமைகள் போலவே வாழ வேண்டி யிருந்த காலம் அது.

(1) தொழிலாளர் சங்கம் சேர்ந்து ஸ்டிரைக் செய்வது கிரிமினல் குற்றமாக மதிக்கப் பட்ட காலம் அது.

(2) இங்கிலாந்தில் அப்போது சொத்துள்ளவர்களைத் தவிர எவருக்கும் வோட்டில்லை. ஓரளவு வருமானமும், வரிப்பொறுப்புள்ளவர்களுக்கும் தான் வோட்டு. அதாவது, நிலச்சுவான், வியாபாரி தொழில் நடத்தும் முதலாளி இவர்களுக்குத்தான் வோட்டுரிமை இருந்தது. அதாவது (Land-lord) (நிலப்பிரபு) (Bourgeois) பூர்ஷ்வா (தொழிலதிபர், வியாபாரி) இவர்களுக்குத்தான் வோட்டுரிமை இருந்தது. (பூர்ஷ்வா-என்றால் "நகரவாசி") என்று பொருள். ஆகவே தொழிலதிபர்கள். வியாபாரிகள் ஆகியோருக்கு அந்தப் பெயர் வந்தது.) தொழிலிலோ வியாபாரத்திலோ லாபம் சம்பாதிப்பவர்களை பூர்ஷ்வா என்றபொதுச்சொல்லால் குறிப்பிடுவார்கள்.

அந்தக் காலத்தில் ஜனத்தொகையில் சுமார் 5 சதவிகிதத்தினருக்குத்தான் வோட்டு.

ஆகையால் தொழிலாளர் நிலை நாளுக்கு நாள் மோசமாகி, முதலாளி - தொழிலாளி வர்க்கப் போர் உருவாகும் என்று அவர் மதிப்பிட்டார். மேற்கு ஐரோப்பா தான் அப்போது தொழிலில் முன்னணியில் இருந்தது. அங்கு தான் முதலில் "வர்க்கப் போர்" மூண்டு கம்யூனிஸம் ஏற்படும் என்று அவர் எதிர்பார்த்தார்.

அந்தக் காலத்தில் இருந்த நிலை அதுதான். ஆகையால் மார்க்ஸ், "முதலாளித்துவம் அழிந்துபோவதற்குள்ள வித்து முதலாளித்துவத்திலேயே பொதிந்து கிடக்கிறது" (Capitalism contains the seeds of its own destruction) என்று கருதினர்.

சமூக சூழ்நிலையில் ஏற்பட்ட மாறுதல்

ஆனல் அவர் எதிர்பார்க்காத இரண்டு காரியங்கள் பின்னர் உருவாயின (1) தொழிலாளர் சங்கம் சேருவது சட்ட விரோதம் அல்ல என்று "லிபரல்களில்" (தனி மனித சுதந்திரவாதிகள்) தூண்டுதலின்மீது முதலாளிகளே (Conservatives) சட்டம் இயற்றினர். (2) வோட்டுரிமை தொழிலாளருக்கு படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டது.

ஆகவே அவருக்குப் பிறகு மேற்கு ஐரோப்பாவில் பெரும்

மூலதனம் தேவைப்படும் தொழில்கள், யந்திர மயத் தொழில்கள் பல மடங்கு பெருகின போதிலும். அவர் எதிர் பார்த்த முதலாளி-வர்க்கப்போராட்டம்உருவாகாமல் முதலாளி-பட்டாளி கூட்டுறவே உருவாயிற்று!

"முதலாளித்துவ அழிவுக்கான விபத்துக்கள் (Seeds of destruction) முதலாளித்துவத்துக்குள்ளேயே பொதிந்து கிடக்கின்றன" என்று மார்க்ஸ் கூறினார். ஆனால் "முதலாளித்துவம் தன்னை மாற்றி யமைத்துக் கொள்வதற்கும் சீர் திருத்துவதற்குமான வித்துக்கள் (Seeds of its own reconstruction & reform) அதனுள்ளேயே பொதிந்து கிடக்கின்றன" என்று அவர் சொல்லியிருந்தால் சரியாக யிருந்திருக்கும்! அவர் கண்ட "முதலாளித்துவத்தின்" தன்மை அவ்வளவு மாறியாய் விட்டது. அந்தக் காலத்தில் அதாவது சென்ற நூற்றுண்டில் பிரிட்டன் தான் "உலகின் வொர்க்ஷாப்" (உலகின் தொழிற்பட்டறை) என்று சொல்லும் அளவுக்கு யந்திரத் தொழிலில் மிகவும் முன்னேறியிருந்த நாடு. மார்க்ஸ் திட்டப்படி அங்கு அல்லது ஜெர்மனி, பிரான்ஸில்தான் புரட்சி ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனல் அவர் எதிர்பார்த்த வர்க்கப் போராட்டத்துக்கும் புரட்சிகளுக்கும் பதிலாக "புரட்சி இல்லாமலே" முதலாளித்துவத்தின் தன்மை மாறியது.

1875ல் பிரிட்டனில் தொழிற் சங்கச் சட்டம் வந்தது. தொழிலாளர் சங்கம் சேர்ந்து ஸ்டிரைக் செய்தால் அது கிரிமினல் குற்றம் அல்ல என்ருயிற்று. ஒரு கன்சர்வேட்டிவ் மந்திரி சபையே இப்படி சட்டம் இயற்றியது!

கார்ல் மார்க்ஸ் காலத்தில் இங்கிலாந்தில் ஜனத்தொகையில் 1000ல் 56 பேருக்குக்கூட (5·6 சதவிகிதம்) வோட்டுரிமை இருந்ததில்லை. 1885ல் பிரிட்டனில் ஜனத்தொகையில் ஆயிரத்தில் சுமார் 168 பேர் வோட்டுரிமை பெற்றனர். இது ஆண் ஜனத்தொகையில் 1000க்கு 320க்குச் சமம். அதாவது, தக்க வயது வந்த ஆண்களில் பெரும்பாலோருக்கு வோட்டுரிமை என்று பொருள். இந்த நிலைமை ஏற்பட்ட பிறகு, தொழில் முன்னேற்றம் ஏற்பட்ட நாடுகளில் மார்க்ஸ் எதிர்பார்த்தபடி "வர்க்கப் போராட்டம்" உருவாவதற்கு பதிலாக "வர்க்கப் போராட்டம் அர்த்தமற்றது" என்பது போன்ற உணர்ச்சி பரவ ஆரம்பித்தது.

(1) மூலதனம் இல்லாமல் தொழில் இல்லை; ஆகவே மூலதனம் போடுவோர் (முதலாளி) இல்லாமல் தொழில் இல்லை என்று மார்க்ஸின் "பாட்டாளி மக்கள்" உணர்ந்தனர். (2) தொழிலாளி இல்லாவிடில் மூலதனத்தைப் பயன்படுத்த முடியாது என்று மார்க்ஸின் (Capitalist) "முதலாளி" உணர்ந்தார். ஆகவே இருவரிடையேயும் மார்க்ஸ் எதிர்பார்த்த போர் ஏற்படுவதற்குப்

பதிலாக அவர் எதிர்பார்க்காத கூட்டுறவு பேரம் உருவாயிற்று!

போராட்டத்துக்குப் பதிலாக "கூட்டு பேரம்"

வர்க்கப் போராட்டமும் புரட்சியும் "வந்தே தீரும்" என்று மார்க்ஸ் எதிர்பார்த்ததில் தவறில்லை. ஆனால் "வர்க்கப் போர்" இல்லாமலே பாட்டாளி மக்களின் (சொத்து இல்லாத உழைப்பாளர்கள், தாமே தொழில் நடத்த இயலாமல் பிறரது தொழிற்சாலைகளில் "பாட்டாளியாக" ஆனவர்களின்) நிலை உயருவது சாத்தியமாயிற்று. முதலாளித்துவத்தின் தன்மை மாறியது.

இப்போது முதலாளித்துவம் தொழிலாளியின் உறவால் மாறினது மட்டுமல்லாமல், சர்க்கார் தலையீடு சம்பந்தமாகவும் முதலாளித்துவத்தின் தன்மை மாறியது.

சாராம்சம்

முதலாளி- தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் மூலம் (Klassenkampf) மூலம் முதலாளித்துவம் அழியும் என்று மார்க்ஸ் எதிர்பார்த்தார். ஜனநாயகம், தொழிற்சங்க இயக்கம் முதலியவற்றின் காரணமாக காலப் போக்குக்குத் தக்கபடி தன்னைமாற்றிக்கொள்ளும் தன்மை முதலாளித்துவத்தினிடம் உருவாகும்என்றோ,முதலாளி தொழிலாளி கூட்டுறவு ஏற்படும் என்றோ அவர் எதிர்பார்க்கவில்லை.

கம்யூனிஸம் ஏற்பட்டு, நாளடைவில் சர்க்காரே State என்பதே அவசியமில்லாத பொருளாக உதிர்ந்துவிடும் (Wither away) என்று அவர் எதிர்பார்த்தார். ஆனால் "கம்யூனிஸம்" ஏற்பட்ட நாட்டில் 50 ஆண்டுக்கு பின்னரும் ராஜாங்கம் "பழுத்த இலை போல உதிர்ந்து போவதற்கு'ப் பதிலாக எதேச்சாதிகாரமாக நீடிக்கிறது. இதுதான் ரஷியாவில் உள்ள நிலைமை. அங்கு இருப்பது "கம்யூனிஸம்" அல்ல என்பதை அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள். அங்கு இருப்பது பாட்டாளி மக்கள் மீது "எதேச்சாதிகாரம்' செலுத்துவது என்ற அடிப்படையில் அமல் நடத்தப்படும் சோஷலிஸம். (ரஷிய கம்யூனிஸ்ட் கட்சியினர் எதேச்சாதிகாரத்தை கைவிடாதது ஏன்? இவர்கள் சுபாவத்தில் கொடியவர்களா? இல்லை. எதேச்சாதிகாரம் இல்லாமல், அவர்கள் சித்திரிக்கும் சோஷலிஸம் செயல்பட இயலாது என்பதுதான் எதேச் சாதிகாரத்தின் காரணம்)

"முதலாளித்துவத்தை அழித்துவிடுவதற்குள்ள வித்துக்கள் (seeds of its own destruction) அதனுள்ளேயே இருக்கின்றன" என்று மார்க்ஸ் நினைத்தார். ஆனால் உண்மையில் நடந்தது என்ன? முதலாளித்துவம் தன்னை சீர்படுத்திக் கொள்வதற்கான வித்துக்கள் (Seeds of its own reconstruction and reform) அதனுள் இருந்தன.

உழைப்பாளர் ஒன்றுபட்டு, முதலாளித்துவத்தை உடைப்பர் என்று அவர் எதிர்பார்த்தார். உழைப்பாளிகள் ஒன்றுபட்டு முதலாளித்துவத்தின் பயன்களை பகிர்ந்து கொள்ளும் கூட்டுறவாளர்களாக ஆயினர்!

கார்ல் மார்க்ஸ் எதிர்பார்த்த கம்யூனிஸத்துக்கும் இப்போது செயலில் காணப்படும் கம்யூனிஸத்துக்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. முதலாளித் துவத்தின் தன்மை மாறிவிட்டது. ஆகையால் "சோஷலிஸம்" என்ற சொல்லால் குறிக்கப்படுவது என்ன என்பதும் நிர்ணயமான ஒன்றாக இருக்கவில்லை.

—"தினமணி"

திரு. சுந்தரவடிவேலு
சென்னைப் பல்கலைக் கழகத்தின் புதிய துணை வேந்தர்

❋

சென்னை அரசாங்கக் கல்வித் துறை ஆலோசகராகவும். கல்லூரி படிப்புத் துறையின் டைரக்டராகவும், இருந்த திரு என். டி. சுந்தரவடிவேலு சென்னைப் பல்கலைக்கழகத்தின் புது துணை வேந்தராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கால் நூற்றாண்டு காலமாக இந்தப் பதவியை வகித்துக்கொண்டிருந்த டாக்டர் ஏ. லட்சுமண சாமி முதலியாரைத் தொடர்ந்து இவர் இந்தப் பதவிக்கு வந்தார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் புதிய துணை வேந்தரைத் தேர்ந்தெடுப்பதற்கு, அதன் வேந்தரான சென்னை மாநில கவர்னரிடம் மூன்று பெயர்களைச் சிபாரிசு செய்வதற்கென்று தலைமை நீதிபதி திரு வீராசாமி அவர்கள் தலைமையில் மூன்று பேர் கொண்ட கமிட்டி' ஒன்று நியமிக்கப்பட்டது நினைவிருக்கலாம்.

மூவர் குழு திரு ஜி.ஆர். தாமோதரன், டாக்டர் ரத்தினவேலு சுப்ரமண்யம், திரு நெ. து. சுந்தரவடிவேலு மூவர் பெயரையும் சிபாரிசு செய்திருந்ததென்று தெரிகிறது.

அதன்படி, சென்னை மாநில கவர்னரால் திரு. சுந்தரவடிவேலு துணை வேந்தராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திரு சுந்தர வடிவேலு ஆகஸ்டு 1-ந் தேதியன்று புதிய பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

அண்ணாவின் பணிகளைத் தொடர்வோம்

[ரெ. து. சுந்தரவடிவேலு]

●

வையகத்தில் தோன்றியவர்கள் எண்ணில் அடங்கார். மறைந்தவர்களும் அத்தனை பேர்களே. கோடானு கோடி பேர்களிலே ஒரு சிலரே மறைந்தும் மறக்கப்படாதவர்களாக என்றென்றும் நினைவில் நிலைத்து நிற்கிறார்கள். அத்தகைய வரலாற்று நாயகர்களிலே ஒருவர் அறிஞர் அண்ணா !

கோபுரத்தின் உச்சியிலே முளைத்து விட்டதால் ஊரார் கண்ணில் படும் செடியுமுண்டு. மண்ணில் ஆழத்திலே முளைத்தாலும், மெல்ல மெல்ல வளர்ந்து கோபுரத்திலும் உயர்ந்து, வானுற உயர்ந்து விளங்கும் நன்மரங்களும் உண்டு. அறிஞர் அண்ணா பிந்திய வகையைப் போன்றவர்.

பெற்றோரின் புலமை, செல்வம், செல்வாக்கு ஆகிய எத்துணையும் இன்றியே, தன் வலியால்மட்டுமே, தம் உழைப்பால் உயர்ந்து ஒளிவிட்டவர் அண்ணா. சாதாரண குடும்பத்தில் பிறந்த ஒருவர் பாரறியும், பார் போற்றும் நிலைக்கு வந்தது நமக்கெல்லாம் பெருமை ; பூரிப்பு; ஊக்கம்.

உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ ? இல்லை. முயற்சி மெய் வருத்தக் கூலிதரும்.

அண்ணா பிறந்தபோது தமிழ் மக்களுக்கு இக்காலக் கல்வியின் மேல் கருத்து பதியவில்லை. தனக்கென்று தாழ்வாரமும் வீடும் தேடிக்கொண்டிருந்தால் போதுமென்று கருதினர். காலத்திற்கேற்ற கல்வியை அலட்சியப்படுத்தினர். இத்தகைய சூழ்நிலையில், அண்ணாதுரை இக்காலக் கல்வி கற்க அனுப்பிவைத்த பெற்றோர்க்கு நம் நன்றி !

மாணவர் அண்ணா சிறந்த மாணவர். ஆசிரியர் சொல்லிக் கொடுக்கும் பாடங்களை அப்படியே மனதில் பதிய வைத்துக் கொள்வார். வகுப்பு நேரத்தில் மனதை அங்குமிங்கும் ஓடவிடாது கட்டிக் காக்கும் இயல்பினை வளர்த்துக் கொண்டார். ஒரு மனப்பட்டு கற்றதால் முதல்தரமான மாணவராக விளங்கினார்.

ஒரு மனப்பட்ட மாணவராக இருந்த அவர், வெறும் பாடப் படிப்போடு நின்று விடவில்லை. வகுப்புப்பாடங்களுக்கு அப்பாலும் நிறையப் படித்தார். எனவே அவரது அறிவு விரைந்து வளர்ந்தது.

அண்ணா தாய்மொழியாம் தமிழ் மொழியிலும் உலக மொழியாம் ஆங்கிலத்திலும் நிறையப்படித்தார்.

மாணவராக இருந்தபோது மட்டுமல்ல; பின்னரும் கடைசிவரை. அண்ணா, நாடாளுமன்றத்தின் மேலவை உறுப்பினராக இருந்தபோது, பெரும் பொழுதை நாடாளுமன்ற நூலகத்தில் செலவிட்டாராம். அந்நூலகத்தில் அவர் படித்த அளவு, பிற உறுப்பினர் எவரும் படித்தது இல்லை என்று தில்லிவாழ் நண்பர்கள் பெருமைப்பட்டதை நான் நேரில் கேட்டு பெருமிதம் கொண்டுள்ளேன்.

கற்றனைத்தூறும் அறிவு. இரு மொழியிலும் நிறையக் கற்ற அண்ணா, அறிவுக் கடலாக வளர்ந்து அறிஞராகத் திகழ்ந்தார். அறிஞர் அண்ணாதுரை மொழிகளில் புலமையும் கருத்து வெள்ளமும் பெற்று விட்டு, நின்று விடவில்லை.

அறிஞர் அண்ணா, இன்றைய தமிழகத்தின் தலைசிறந்த பேச்சாளராக விளங்கினார். ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒரு சேர பேச்சுவன்மை பெற்றிருந்தார். அதை ஓயாது, பயன் படுத்தினார். தமிழ் மக்களைத் தட்டி எழுப்பினார். தமிழ்ப் பற்றினை ஊட்டினார். தன்மான உணர்ச்சியினை ஏற்றினார். சாதி வெறியினை அடக்கினார்.

கதியிலையே என்று தாழ்ந்து கிடந்த தமிழ்ச் சமுதாயம் தன்னிலையுணர்ந்து, தன்மானம் பெற்று எழுந்து, நிமிர்ந்தது, விழித்தெழுந்த தமிழ்ச் சமுதாயத்தின் தளபதியானார் அறிஞர் அண்ணா. தமிழர்களின் விழிப்பிற்கும் தமிழின் மறுமலர்ச்சிக்கும் அவர் பெரிதும் காரணமாக இருந்தார்.

அண்ணாவின் பேச்சுவன்மைக்குப் போட்டி அவரது எழுத்து வன்மை! ஆங்கிலத்திலும் தமிழிலும் அவரது எழுத்தாற்றல் அறிஞர் உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்டது.

அரைத்த மாவை அரைக்கும் எழுத்தாளரல்ல அறிஞர். எவனோ சொன்னான், எப்போதோ சொன்னான் என்பதற்காக எதையும் ஏற்றுப் போற்றிவந்த பொதுமக்களைக் குலுக்கி, உலுக்கி சிந்திக்க வைத்தன அவரது பேச்சும் எழுத்தும். ஏன்? எதனால்? எப்படி? என்று சிந்திக்க வைத்தன அவை

ஆயிரம் ஆயிரம் கூட்டங்களில் பேசிப் பேசி, கண்மூடிப் பழக்கங்களைச் சாடிச்சாடி, சாதி இறுமாப்பை இடித்து இடித்துத்தள்ளி, பகுத்தறிவு பெற, தன்மானம் பெற, எல்லோரும் ஓர் குலம் என்னும் சமநிலையடைய நாலு கோடித் தமிழ் மக்களை அழைத்துக் கொண்டு, பெரு நடை நடந்த, முதல்வர் அறிஞர் அண்ணா தொடங்கிய புரட்சிகள் பல! தாமே முடித்து வைத்த புரட்சிகள் பல! தம்பிகளிடம் ஒப்படைத்து விட்டு விலகிய பணிகள் பல! அவற்றையெல்லாம் முடித்து வைக்க உறுதி கொள்வோமாக!

—"தென்னகம்"

மனித உரிமைகள்

[செய்யாறு செல்வம், எம். ஏ.]

1948-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10-ஆம் நாள் மனித சமுதாயத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள். அன்றுதான் ஐக்கிய நாடுகள் பேரவை பாரிஸ் நகரில் கூடி மக்கள் உரிமைபற்றிய 'சாசனத்தை' வெளியிட்டது. அந்த நாள் மனித சமுதாயம் உரிமை கோரி நடத்திய நீண்ட போராட்டத்திற்கு ஒரு வெற்றி விழா.

மனித சமுதாயம் தோன்றிய நாள் முதல் மனிதனை மனிதன் அதிகாரத்தின் பெயரால், இனத்தின் பெயரால், நிறத்தின் பெயரால், மதத்தின் பெயரால், சாதியின் பெயரால், பண வலிமையின் பெயரால், பாலின் பெயரால் (பெண்களை ஆண்கள் அடிமைப்படுத்துவது) அடிமைப் படுத்தியும், சுரண்டியும் வந்தனர். நாகரிகம் பரவாத நேரத்தில் மனிதன் விலங்குகளைப் போல் மலைக் குகைகளிலேயும், மரப் பொந்துகளிலேயும் வாழ்ந்து வந்த காலத்தில், வலியோர் எளியோரை அடிமை கொண்டனர். 'வலிமையே உரிமையாக' அங்கே விளங்கியது. நாகரிகம் பரவி மனித சமுதாயம் அரசியல் அமைப்பையும் பெற்ற பிறகு, பாமர மக்கள் கொடுங்கோல் ஆட்சியின் கீழ், பல இன்னல்களை அனுபவித்தனர். கொடுங்கோலர்கள் தங்கள் செய்கைக்கு மதத்தையும் ஆண்டவனையும் துணைக்கழைத்தனர்.

"மக்களை ஆளவே மன்னனை மகேசன் படைத்தான். மன்னன் கொடுங்கோலனாக இருந்தால், மக்கள் மன்னனை எதிர்த்துப் புரட்சி செய்யலாகாது. மக்கள் தாங்கள் செய்த பாவங்களுக்கு மகேசனால் அனுப்பப்பட்ட தண்டனையாகக் கொடுங்கோலனை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று கொடுங்கோலர்கள் "தெய்வாம்சக் கொள்கை" பேசிவந்த காலம் ஒன்று இருந்தது. அந்தக் கொடுங்கோல் ஆட்சிக்கும் இன்றைய பிரதிநிதித்துவ மக்களாட்சிக்குமிடையே எவ்வளவு நீண்ட பாதையை மனித சமுதாயம் கடந்து வந்துள்ளது.

பண்டைக் காலத்தில் மனிதனை மனிதன் அடிமைப்படுத்தி விலங்கைப்போல் நடத்தி வந்தான். பண்டைய கிரேக்க நாட்டில் போர்க் கைதிகள் அடிமைகளாக நடத்தப்பட்டனர், ரோமாபுரியில் மனிதர்கள் கடனுக்காக விற்கப்பட்டனர். ஜூலியஸ் ஸீஸர் போர்க் கைதிகளை ஏலத்தில் விற்

ருன். பிரஞ்சு நாட்டில் நிலத்தை விற்கும் போது அதில் உழைத்து வந்த அடிமைகளும் சேர்த்து விற்கப்பட்டனர்! பெண்ணடிமைகள் பிரான்சில் மாடுகளோடு சேர்ந்து நிலத்தை உழுதனர்!!

ஆப்ரிக்கா கண்டம். வெள்ளையர்களுக்கு அடிமைகளின் வேட்டைக் காடாயிருந்தது. அடிமைத்தனம் அரசோச்சிய காலத்தில் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் கருப்பர்கள் அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்டனர். அடிமைகளை ஏற்றிச் சென்ற கப்பல் பளுகாரணமாக மூழ்கும் தறுவாயில் இருந்தால், பளுவைக்குறைக்க சில அடிமைகள் கடலிலே பிடித்துத் தள்ளப்படுவதுண்டு. 1808-இல் தான் இங்கிலாந்தில் அடிமைத்தனம் சட்டத்தால் ஒழிக்கப்பட்டது. அமெரிக்காவில் ஒழிக்கப்பட்டது. அமெரிக்காவில் அடிமைத்தனத்தை ஒழிக்க ஓர் உள்நாட்டுப் போரே ஏற்பட்டது. உள்நாட்டுப் போரின் முடிவில், ஆப்ரகாம்லிங்கனால் 1863 ஜனவரி 1ஆம் நாள் அமெரிக்காவில் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டது.

மனிதனின் உடல் மற்றொரு மனிதனுக்கு அடிமைப்படுத்தப்பட்டது போல், மனிதனின் உள்ளமும் மதத்தின் பெயராலும் மூடநம்பிக்கையின் பெயராலும் பலகாலமாக அடிமைப் படுத்தப்பட்டு வந்தது. ஐரோப்பாவில் கிருஸ்தவ மதத்தின் பெயரால் சிந்தனை உரிமையும், கருத்துச் சுதந்திரமும் பறிக்கப்பட்டு பகுத்தறிவு வாதிகள் சொல்லொணாத கொடுமைகளுக்கு ஆளாயினர். "உலகம் உருண்டை வடிவமானது" என்று கூறியதற்காக கலிலியோ சிறையில் தள்ளப்பட்டார்; முழந்தாளிட்டுப் பணியவைத்து 'பைபிளின்மீது' கை வைத்து மன்னிப்புக் கோரும்படிச் செய்தனர். கலிலியோ பத்து ஆண்டுகள் சிறையில் வாடி சிறையிலேயே இறந்தார். கத்தோலிக்க மதத்தின் கொடுமையைக் கண்டித்ததற்காக, ப்ருனோ பல ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டு இறுதியில் 1600 பிப்ரவரி 16ஆம் நாள் ரோமாபுரியில் உயிரோடு கொளுத்தப்பட்டார். இங்ஙனம் அரச பீடமும் மத பீடமும் மனித உரிமைகளைக் காலால் மிதித்துத் துவைத்து வந்தன. இவ்விரண்டு கொடுங்கோன்மையையும் எதிர்த்து தனி மனிதர்களின் உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவை விரிவடையச் செய்தவை இரண்டு இயக்கங்கள். ஒன்று சீர்திருத்த இயக்கம்; மற்றொன்று தொழிற் புரட்சி தோற்றுவித்த முதலாளித்துவம்.

தனி மனிதனின் மனச்சாட்சி தான் தலையாயது என்று சொல்லி அவனது உரிமைகளுக்கு ஏற்றம் கொடுத்தது சீர்திருத்த இயக்கம்.

மத பீடம், அரச பீடம் ஆகிய இரண்டின் பந்தங்களில்லாமல் தொழில் செய்து தனிப்பட்டவர்கள் பிழைக்க வழி செய்து கொடுத்து, மனித உரிமைகள் வளருவதற்கான சூழ்நிலையை ஆரம்பக் கட்டத்தில் தோற்றுவித்தது முதலாளித்துவம்.

18-ஆம் நூற்றுண்டில் உருவான மனித உரிமைகள் வரலாற்றுப் புகழ் வாய்ந்தவை. அமெரிக்காவின் விடுதலேயும் பிரெஞ்சுப் புரட்சியும் அவற்றின் நேரடி விளைவுகள். இவ்வியிரண்டும் 19—வது நூற்றுண்டில் மனித உரிமைகள் உலகமெங்கும் மறுமலர்ச்சி காணத் துணைபுரிந்தன. தொழிற் புரட்சியின் பயனுக, வேளாண்மைக்கு இருந்து வந்த முக்கியத்துவம் ஒழிந்து ஆலேத் தொழில் நாட்டின் பொருளாதாரத்தில்முதன்மைபெறலாயிற்று. ஆலேத் தொழில் வன்மை பெற்று விளங்கவே, அதில் வேலே செய்து வந்த தொழிலாளர்கள், அரசியல் உணர்வு மிக்கவர்களாகவும் கட்டுப்பாடுள்ளவர்களாகவும் விளங்கினுர்கள். தொழிற்சாலேகள் பெருகப் பெருக, தொழிற் சங்கங்களும் பெருகலாயின. தொழிற் சங்கங்கள் தொழிலாளரின் உரிமைகளுக்காகப் போராடும் கருவிகளாயின.

19-ஆம் நூற்றுண்டில் ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளால் அடிமைப்படுத்தப்பட்டு வந்த ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் அரசியல் விடுதலே கோரி ஏகாதிபத்தியங்களே எதிர்த்துப் போராட்டங்களில் ஈடுபடலாயின. முதல் உலகப்போரின் முடிவில், ரஷியாவில் சாரிஸக் கொடுங்கோல் ஆட்சி தூக்கி எறியப்பட்டு சமதர்மக் குடியாட்சி நிறுவப்பட்டது. ரஷியாவில் புதிதாக அமைக்கப்பட்ட தொழிலாளி வர்க்க அரசு, உலகெங்குமுள்ள தொழிலாளர் இயக்கத்துக்குப் புத்துணர்ச்சியையும், புதிய எழுச்சியையும் உண்டாக்கியது. தொழிலாளர்கள் வெறும் அரசியல் உரிமைகள் பெற்றுவிடுவதால் மட்டும் பயனில்லே. அவற்றை முழுதும் துய்ப்பதற்கு வேண்டிய பொருளாதார உரிமைகள் பெற்றுக வேண்டும் என்ற உண்மையை உணர்ந்தனர். ஏழைத் தொழிலாளிக்குப் பேச்சுரிமையும், கூட்டம் கூட்டும் உரிமையும் அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வது கேலிக் கூத்தாகும். அத்தொழிலாளிக்கு கல்வி பெறும் வாய்ப்பும், பொது வாழ்வில் பங்கு பெறுவதற்கான ஓய்வும் அளிக்கப்பட்டால் தான் அவற்றை அவன் பயன்படுத்த முடியும். அதைப் போலவே, ஏழைக்கு வாக்குரிமை அளித்து விடுவதனுலே மட்டும் பிரச்சினே தீர்ந்துவிடவில்லே. அவன் வறுமை, பசிக்கொடுமை காரணமாக விலே மதிக்க முடியாத வாக்குரிமையை ஐந்துக்கோ அல்லது பத்துக்கோ விற்றுவிடலாம். அதனுல் ஏழைக்கு அரசியல் உரிமைகள் வழங்கிவிடுவதால் மட்டும் பயனில்லே. அவற்றைப் பயன்படுத்தத்தக்க பொருளாதார உரிமைகளும் வழங்கப்பட்டாக வேண்டும் என்ற உணர்வு உலகெங்கும் பரவி அதற்கான கிளர்ச்சிகளும் நடைபெற்றன.

இரண்டாவது உலகப் போரின் முடிவில், உலகில் மனித உரிமைகளேக் கட்டிக் காப்பதற்கு என்று ஒரு நிரந்தர அமைப்பு இருக்க வேண்டுமென்று உலகத் தலேவர்கள் ஒருமுகமாகத் தீர்மானித்தனர்.

1945-ல் ஐ. நா. சாஸனம்

கையெழுத்தாயிற்று. ஐ. நா. சபையின் சமூக, பொருளாதார கவுன்சிலின் ஆதரவில் திருமதி எலியனுர் ரூஸ்வெல்ட் தலைமையில் 18 பேர் கொண்ட மனித உரிமைக் கமிஷன் அமைக்கப் பெற்றது.

மனித உரிமைப் பிரச்சினை மூன்று அம்சங்களைக் கொண்டதாக இருக்கவேண்டும் என்று அக்கமிஷன் முடிவு செய்தது. ஒன்று, மனித உரிமைப் பிரகடனம், இரண்டாவதாக மனித உரிமைகள் பற்றிய உடன்பாடு, மூன்றாவதாக, அவற்றை அமுல் செய்வதற்கான நடவடிக்கைகள் பற்றியவை.

1948 டிசம்பர் 10-ஆம் நாள் மனித உரிமைப் பிரகடனத்தை ஐ. நா. பொதுச் சபை ஒப்புக் கொண்டது. மனித உரிமைப் பிரகடனத்தில் 30 அம்சங்கள் உள்ளன. முதலிரண்டு அம்சங்கள் கூறுவதாவது :

கண்ணியம், உரிமைகள் ஆகியவற்றில் சமமாகவும் சுதந்திர முள்ளவர்களாகவும் எல்லா மானிடர்களும் பிறக்கிறார்கள். அவர்கள் பகுத்தறிவும், மனச்சாட்சியும் படைத்தவர்கள். சகோதர உணர்ச்சியுடன் ஒருவர்பால் ஒருவர் நடந்து கொள்ளவேண்டியவர்கள்.

இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல், அல்லது வேறு கருத்து, தேசிய சமூக நலங்கள், சொத்து, பிறப்பு, அல்லது வேறு அந்தஸ்து என்ற எவ்விதமான பாகுபாடுமின்றி இந்தப் பிரகடனத்தில் செப்பியுள்ள எல்லா உரிமைகளையும், சுதந்திரங்களையும் அனுபவிக்கும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

ஐ. நா. வின் உரிமைப் பிரகடனம் ஒவ்வொரு நாட்டிலும் எல்லோருக்கும் தெரிந்திருப்பது அவசியம். அவை தாம் ஜனநாயகத்துக்கு உரைகல்லாக இருப்பவை, அரசின் ஒவ்வொரு செயலையும் அதன் அடிப்படையில் தான் மக்கள் மதிப்பிடுவர்.

—“ காஞ்சி ”

உலகளாவிய ஒரு சிக்கல் தீர வழி :

அழுக்குத் தண்ணீர் மீண்டும் உதவும்

— டாக்டர் ஜே. எல். பிரேக்மென் —

✻

தண்ணீர் இல்லாமல் மனிதன் உயிர் வாழ இயலாது! சுத்தமான குடிதண்ணீர் அவனுக்கு இன்றியமையாத ஒன்று.

முன காலத்திலே மனிதன் நீர் வளம் நிறைந்த இடங்களில் தனது குடியிருப்புகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்து வந்தான்.

உலகம் மேலும் மேலும் வளர்ந்து முன்னேறுகையில் நல்ல தண்ணீர் படிப்படியாகக் குறைந்து கொண்டே வந்து இன்று நிலைமை கடுமையாகியுள்ளது ; மனிதனே வேண்டுமென்று செய்த செயல்களின் விளைவுதான் இது. மனித குலத்தின் கொடிய எதிரி மனிதனே !

அமெரிக்காவுக்கு ஏற்பட்டுள்ள தண்ணீர்ச் சங்கடங்கள் உலகின் ஏனைய நாடுகளுக்கு ஒரு படிப்பினையாகவும் இருக்கும் ; நம்பிக்கை தருவதாகவும் இருக்கும். என் நாட்டிலே பேராறுகளும் சிற்றாறுகளும், ஏரிகளும் நிறைய இருக்கின்றன. உலகிலேயே இணையற்ற வகையில் மிகச் செம்மையான அணைக்கட்டுகளும் நீர்த்தேக்கங்களும் அமெரிக்காவில் இருக்கின்றன. ஒரு சில வறண்ட பிராந்தியங்கள் நீங்கலாக அமெரிக்காவில் மழையும் நிறையப் பெய்கிறது.

இயற்கையான நீர்வளமும் மனிதன் படைத்த நீர்வளமும் இவ்வளவு மிகுதியாக இருந்தும்கூட, அமெரிக்காவின் பல பகுதிகளிலே தண்ணீர் கெட்டுவிடும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் வளர்ச்சியும் பொருளாதார ஏற்றமும் தடைப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் 50 மாநிலங்களிலும் தண்ணீர் அழுக்காகும் பிரச்னை மிகக் கடுமையாக இருக்கிறது.

எங்கள் பிரச்னைகள் மலைக்க வைத்தாலும்கூட அவற்றை வெல்லும் முயற்சியில் இறங்கி விட்டோம். எங்கள் வழிகளை உலகம் நெடுகிலுமுள்ள பிற நாடுகளும் தகுந்த மாறுதல்களுடன் தழுவிப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

நமக்கு ஏற்பட்டுள்ள அடிப்படையான பிரச்னை இதுதான் : நீர்வளம் பெருகவில்லை ; மக்கள் தொகையோ மேலும் மேலும் பெருகி வருகிறது. பெருகி வரும் மக்களுக்குப் பெருகாமல் இருக்கும் நீர்வளம் போதவேண்டும் ;

அதுமட்டுமல்ல, தொழில் துறைக்கும் வேண்டிய தண்ணீர் கிடைக்க வேண்டும். இந்தத் தேவையும் பெருகிக்கொண்டே போகிறது.

யு.எஸ். நீர்வளக் கவுன்சில் அண்மையில் தேசிய மதிப்பீடு ஒன்றினைச் செய்து முடித்தது. அது கூறுவதாவது : இப்பொழுது நாள் ஒன்றுக்கு 2,37,4½ கோடி கியாலன் தண்ணீர் உபயோகிக்கும் நகராட்சி மன்றங்களுக்கு 31 ஆண்டுகள் கழித்து, 2000-ம் ஆண்டுவாக்கில் அதிகப்படி 5072·4 கோடி கியாலன் தண்ணீர் தேவையாக இருக்கும்.

தொழில்களுக்குத் தேவையான த்ண்ணீர் அளவைப் பார்த்தால், மேலே கூறப்பட்ட தொகை மிக அற்பம் என்றே தோன்றும். தொழில்கள் ஏற்கெனவே நகரங்கள் பயன்படுத்தும் தண்ணீரைவிட இரண்டுமடங்கு பயன்படுத்துகின்றன. 2,000 ஆண்டு வாக்கில் இப்பொழுது உபயோகிக்கும் அளவைப் போல் மூன்று மடங்கு அவற்றுக்குத் தேவையாக இருக்கும்.

எனவே கெட்டுப்போன தண்ணீரை மறுபடியும் பயன்படுத்தத் தகுதியாக்குவதற்கு, அதனைச் சுத்தம் செய்யும் ஆற்றலை அமெரிக்கா பெற்றாக வேண்டும்.

பயன்படுத்திய தண்ணீரையே மீண்டும் பயன்படுத்துவது என்பது புதிதல்ல. பெரிய ஆறுகளிலும் சிற்றாறுகளிலும் ஒருவர் குளித்த தண்ணீரிலேயே வேறு ஒருவர் குளிக்கிறார். ஓடும் தண்ணீர் இயற்கையாகவே சுத்தமாகி விடுகிறது.

இன்றும்கூட, ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு ஓடும் ஆற்று வெள்ளம் ஒரு தடவை பயன்படுத்திய வெள்ளமாகத்தானே இருக்கிறது.

இயற்கையாக நடக்கும் இந்தச் சுத்திகரிப்பு வேலையை இன்று செயற்கையாகத் திட்டமிட்டுச் செய்கிறோம் ; அவ்வளவுதான்.

சுத்தம் செய்யும் முறைகள் பல. ஒரு தடவை உபயோகிக்கப்பெற்ற தண்ணீர், மிகத் திருப்திகரமாக இல்லாவிடினும் சகிக்கக்கூடிய அளவுக்கு இந்தப் பலவேறு முறைகளால் சுத்தம் செய்யப்படுகிறது.

நமது தொழில் நுட்ப அறிவு மிகவும் முன்னேற்றம் அடைந்திருப்பதன் விளைவாகக் கூட்டுப் பொருள்களின் எண்ணிக்கையும் மென்மேலும் பெருகி வருகிறது. இக்தக் கூட்டுப் பொருள்களின் காரணமாக, வழக்கமான முறைகளைக் கொண்டு தண்ணீரைச் சுத்தம் செய்ய முடியவில்லை ஓரளவுதான் தண்ணீர் சுத்தமாகிறது.

நீர்ப்பெருக்கால் தண்ணீர் சுத்தம் அடைவதும் குறைந்து வருகிறது. ஆறுகளில் தண்ணீர் இயற்கையாகச் சுத்தமாவது பலவேறு கூட்டுப் பொருள்கள் காரணமாகத் தடைப்படுகிறது.

நகராட்சிகளின் சாக்கடை நீரும் கூட, சாத்தியமான வரை எவ்வளவோ சுத்தம் செய்யப் பெற்றாலும் கரையக்கூடிய எல்லாக் கூட்டுப் பொருள்களும் நீக்கப் பெருமலேதான் ஆறுகளில் போய்ச் சேர்கிறது. இந்த நிலைமை ஏற்கெனவே சகிக்க முடியாததாகிவிட்டது.

உரச் சத்துக்கள், உப்புக்கள், உயிரியல் முறையல்லாத முறையில் அழியும் அங்ககப் பொருள்கள் ஆகியவற்றை அகற்றும் வழி இன்றைய சுத்திகரிப்பு முறைகளில் மிகச் சிறந்தவற்றிலும் இல்லை. எனவே, பௌதிக—ரசாயன முறைப்பட்ட பிரிக்கும் வழிகளை அதிகமாகப் பயன்படுத்தி இன்னும் செம்மையான முறைகளைக் காண்பர் என்பது உறுதியாகிறது.

அமெரிக்காவில் பல இடங்களில் ஒருமுறை பயன்பட்ட தண்ணீரையே வேண்டுமென்றே மறுபடியும் பயன்படுத்தி வருகிருர்கள். அமெரிக்காப் போன்று தண்ணீர்ப் பிரச்னைகள் உள்ள நாடுகளுக்கு இது உதவக்கூடும்.

டெக்ஸாஸ் : நியூமெக்ஸிக்கோ, அரிஸோனு, நெவேடா, யுட்டா, கலிபோர்னியா முதலிய மாநிலங்களில்பலப்பலநகர்களில் சாக்கடைக் கழிவுநீர் வேளாண்மைக்கும் தொழில் துறையில் முரட்டு வேலைகள் செய்யும் ஆலைகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

அமெரிக்காவின் கிழக்குப் பகுதியில் எஃகுக் கம்பெனி ஒன்று பால்டிமோர் நகரின் சாக்கடை நீரைச் சென்ற 20 ஆண்டுகளாகத் தன் ஆலையில் பயன்படுத்தி வருகிறது.

கலிபோர்னியா மாநிலத்தில் லாஸ் ஏஞ்செல்ஸ் கவுன்டியில் ஒவ்வொரு நாளும் ஒரு கோடி கியாலன் வரை நகரின் சாக்கடை நீர் சுத்தம் செய்து மீட்கப்பெற்று மீண்டும் நகரின் உபயோகத்திற்கே திருப்பிவிடப்படுகிறது.

சாந்தி என்பது கலிபோர்னியாவில் இருக்கும் இன்னொரு ஊர். அது ஒரு காலத்தில் வறண்டு கிடந்தது. தண்ணீர் தேவைப்படும் பொழுதுபோக்கு வரத்து வசதிகள் ஏதும் அங்கு இருக்கவில்லை. இன்று அந்த ஊர் மக்கள் கழிவு நீரைச் சுத்தம் செய்து, படகுகள் விடுவதற்கும், நீச்சல் அடிப்பதற்கும், மீன் பிடிப்பதற்கும் தகுதியாக இருக்கும் நீர்வளமுள்ள ஏரி, குளங்களை அமைத்துள்ளனர்.

தண்ணீரை மறுபடியும் பயன்படுத்துவதில் மிகத் தீவிரமாக நாட்டம் கொண்டிருக்கும் நாடு அமெரிக்கா மட்டுமல்ல; இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, ஜப்பான், மெக்ஸிக்கோ, பஹாமாஸ், சிலி, இஸ்ரேல் முதலிய நாடுகளும் இத்தகைய தண்ணீர்த் திட்டங்களில் ஈடுபட்டிருக்கின்றன.

[58-ஆம் பக்கம் பார்க்க]

ஏன் இந்த அவசரம்?

'புலவர் பாரியப்பன்' —

※

தமிழக அரசு கல்வி உலகில் புரிந்துவரும் பல அரிய சாதனைகளைக் கண்டு நாம் அடிக்கடி வரவேற்றதுண்டு; வாழ்த்தியதுண்டு; பெருமைப்படுவதுண்டு; பெருமிதம் அடைவதுண்டு.

ஆனால் அண்மையில் எல்லாப் பாடப் புத்தகங்களையும் அரசினரே வெளியிடும் என்ற செய்தி கேட்டு வேதனைப் படுகிறோம். பாடப் புத்தகக் கழகம் ஒன்றை நிறுவி அதன் வாயிலாக எல்லாப் பாடப் புத்தகங்களையும் வெளியிடுவதாக மேற்கொள்ளும் முயற்சி தேவையற்றது; ஆழமறியாமல் காலை விடுவது போன்றது.

ஏற்கெனவே அரசியலார் எட்டாம் வகுப்புவரை தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடப் புத்தகங்களை வெளியிடுவதில் தமக்கு நேர்ந்த பழைய அனுபவங்களையும் தொல்லைகளையும் நன்கு சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

பாடப் புத்தகங்கள் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு உரமூட்டும் உயிர்ச்சத்துக்கள். இன்றைய குழந்தைகள் நாளைய குடிமக்கள். இன்றைய அரும்பே நாளைய மலர்; இன்றைய செடியே நாளைய மரம், எதிர்காலக் குடிமக்களின் நல்வாழ்வை எண்ணிப் பாடப் புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. அவை நல்லதரமும் திருத்தமும், அழகும் உடையனவாக அமையவேண்டுமென்றே எல்லாரும் விரும்புவர்.

எட்டாம் வகுப்புவரை வெளிவந்த பாடப் புத்தகங்கள் ஏற்கெனவே பல கசப்பு அனுபவங்களை அளித்திருக்கின்றன. பல்லாண்டுகளாகத் தனியார் வெளியிட்டுவந்த பாடப் புத்தகங்களைவிட அரசினர் பாடப் புத்தகங்கள் தரத்திலோ, செம்மையிலோ, அமைப்பிலோ, அழகிலோ விஞ்சியவை என்று நெஞ்சில் கைவைத்துச் சொல்ல முடியுமா?

பள்ளி திறந்து பல திங்களாகியும் பாடப் புத்தகங்கள் எங்கே? எங்கே? என்று கேட்கும் பள்ளி மாணவர்களுக்குப் பதில் சொல்ல முடியாத அளவுக்குக் காலதாமதம் ஏற்பட்டதுண்டு. ஆனால் தனியார் பதிப்பகங்களோ காலதாமதம் ஏற்பட்டால் தேர்ந்தெடுத்த நம்பாடப் புத்தகங்கள் மாற்றியமைக்கப் படுமே என்ற அச்சத்தால்விரைந்து வெளியிடும் நிலையில் இருந்தனர். பல லட்சக் கணக்கான நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபடும் அரசினர்க்கு இத்தகைய காலதாமதம் ஏற்படுவது இயற்கையே. என்றாலும் இந்நிலை கல்வி யுலகத்துக்கு—மாசற்ற மாணவச் செல்வங்களுக்கு நேரும் பெரிய இடர்ப்பாடு என்பதை மறக்க முடியுமா? மறுக்க முடியுமா?

தமிழிலும் ஆங்கிலத்திலும் தனியார் பாடப் புத்தகங்கள் வெளியிட்ட சமயத்தே நல்ல தரமான—அழகான—புத்தகங்கள் வெளியிடப் பட்டன. பள்ளிக் கூடங்கள் தங்

கள் குழந்தைகளின் சுவைக்கும் சூழ்நிலைக்கும் பொருத்தமான நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கல்வி வளர்ச்சிக்கு நல்ல முறையில் உதவி புரிந்து வந்தன. பதிப்பகத்தார் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு தரமான—திருத்தமான நூல்களை வெளியிட்டு வந்தனர். இத்துறையில் போட்டியானது வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்தது.

சில ஆண்டுகளாக தமிழ், ஆங்கிலப் பாடப் புத்தகங்களை அரசாங்கமே வெளியிட மேற்கொண்ட முயற்சி ஒரு மந்தமான நிலையைத்தான் உருவாக்கிவிட்டது. தின்றதையே தின்று தெவிட்டுதல்போல ஐந்தாறு ஆண்டுகளாக ஆசிரியர்கள் ஒரே பாடப் புத்தகத்தைக் கட்டிக் கொண்டு உள்ளம் சலித்து விட்டனர்.

தனியார் பாடப் புத்தகங்களை விட அரசியலார் பாடப் புத்தகங்கள் எந்தவகையிலும் உயர்ந்தவை என்று யாரும் கூறிவிட முடியாது. பாடப் புத்தகக் குழுவினர்க்குப் பயந்து, பள்ளி மாணவர்களின் சூழ்நிலையை உள்ளத்தில் கொண்டு அனுபவம் மிக்க ஆசிரியர்கள் பலர் எழுதியபுத்தகங்கள் குழந்தைகளின் மொழிப் பயிற்சிக்குச் சுவையூட்டக்கூடியனவாகஇருந்தன. அரசியலார் பாடப் புத்தகங்களை ஒரு பக்கமும் தனியார் பாடப் புத்தகங்களை ஒரு பக்கமும் வைத்துக் காய்தல், உவத்தல் இல்லாமல் காண்பவர் இந்த உண்மை நன்கு அறியக்கூடும்.

இந்நிலையைப் பல முறை எடுத்துக் கூறியும் 'தேசியமயமாக்குதல்' என்னும் பெயரால் எட்டாம் வகுப்புவரை மொழிப் பாட நூல்களை அரசியலாரே வெளியிடும் பணியை மேற்கொண்டு விட்டார்கள். அந்த அளவோடு நின்று விட்டால் போதாதா? அமைதி அடைந்திருப்போம். இன்று அவசரம் அவசரமாக எல்லாப் புத்தகங்களையுமே அரசியலார் வெளியிடப் போவதாகக் கேட்டு உண்மையில் வேதனைப் படுகிறோம் ;

பாடநூல்கள் வெளியிடுவது என்பது பல்லாண்டுகளாகப்—பரம்பரை பரம்பரையாக நடந்து வரும் ஒரு வாழ்க்கைப் பிரச்சினையுமாகும். நூற்றுக் கணக்கான பதிப்பகத்தார், ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள், பல்லாயிரக் கணக்கான விற்பனையாளர்கள், அச்சகத்தார், தொழிலாளர்கள் ஆகியோர் இந்தத் தொழிலையே நம்பி வாழ்கிறார்கள். அவர்களை ஒரே நாளில் இந்தத் துறையை விட்டு விலகிச் செல்லுமாறு தூண்டுவது மக்களின் ஜீவதார உரிமையைப் பறிப்பதாகும் என்று கூறவும் வேண்டுமோ ?

'அரசியலார் பாடப் புத்தகங்கள் எழுதுபவர் யார் ? ஆசிரியர்கள்தானே எழுதுகிறார்கள்?' என்று ஒரு சமாதானம் கூறப்படுகிறது. உண்மைதான். ஒப்புக்கொள்கிறோம். வாழ்நாள் எல்லாம் மாணவர்களின் மொழிவளமும் கலைநலமும் கருதிப் பாடுபட்டு அவர்களின் சுவைக்கும் சூழ்நிலைக்கும் மனப்பக்குவத்துக்கும் ஏற்ற வகையில் நல்ல நல்ல பாடப் புத்தகங்களைப் பல்லாண்டுகளாக இயற்றிவரும் ஆயிரக்கணக்கான ஆசிரி

யர்களின் அறிவும் ஆற்றலும் அனுபவமும் வெளிப்பட வாய்ப்பில்லாமல் மங்கிப் போவது நீதியா? நேர்மையா? என்று கேட்கிறோம்.

மேலும் அரசியலாரே எல்லாப் பாடப் புத்தகங்களையும் வெளியிடுவது என்பது பயங்கரமான பொதுவுடைமைக் கொள்கைக்கு உரமிடுவதாகும். இக்கொள்கை நம் நாட்டுக்குப் பொருந்தாதது. இம் மாதிரி முயற்சிகளில் ஈடுபட்ட பொதுவுடைமை நாட்டில் இருந்த அறிவும் ஆற்றலும் அனுபவமும் மிக்க நல்லாசிரியர்கள் பொதுவுடைமை நாட்டை விட்டு மனக் கசப்புடன் இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குக் குடிபுகுந்த செய்தியைப் படித்திருக்கிறோம். நல்ல ஆசிரியர்களை இழப்பது நாட்டுக்கு நேரும் பேரிழப்பு அன்றோ?

சென்னை போன்ற மாநகரங்களில் அரசாங்கச் சார்பற்ற பல பள்ளிகள் நடத்தப்படுகின்றன. அவற்றில் அரசினர் பாடப் புத்தகங்கள் பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. நல்ல தரமான தனியார் பாடப் புத்தகங்களே தேர்ந்தெடுக்கப்படுகின்றன. அரசினர்புத்தகங்களைவிடத் தனியார் பாடப் புத்தகங்களே தரமாகக் காணப்படுகின்றன என்பதே அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

தனியார் புத்தக வெளியீட்டில் பதிப்பகத்தார் செல்வாக்கு நூலாசிரியர் ஊதியக் குறைவுபோன்ற குறைகள் எடுத்துக் காட்டப்படுகின்றன. அரசியலாரே மனம்வைத்தால் இந்தக் குறைகளை வேறு வழிகளில் நீக்க முடியும். தவறு எங்கு உண்டோ, அங்குக்கண்டித்துத் திருத்த வழியும் உண்டு. செங்கோலுக்கு மிஞ்சிய சங்கீதமா?

பொருளாதாரத்தை முன்னிட்டு அரசாங்கமே பாடநூல்களை வெளியிடவிரும்பினால் அதற்கு ஒரு வழி உண்டு. அரசியலாரும் புத்தகங்களை வெளியிடட்டும். தனியார் பதிப்பகங்களும் வெளியிடட்டும். ஆனால் பாடப் புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பைஅந்தந்தப் பள்ளியாளரிடமே விட்டுவிடட்டும். அதுதான் பொருத்தமான செயலாகும். இந்த முயற்சியில் அரசு போதுமான பயனை அடையுமானால் படிப்படியாகத் தங்கள் முயற்சியை வளர்த்துக் கொள்ள வாய்ப்பு உண்டாகும். திடீரென்று ஒரே சமயத்தில் எல்லாப் பாடப் புத்தகங்களையும் அரசினரே வெளியிட வேண்டும் என்ற முயற்சி அவலை நினைத்து உரலை இடித்துக் கைசலிப்பது போலத் தான் முடியும்.

தேசிய மாக்கும் முயற்சியினை வேறு பல துறைகளில் மேற்கொள்ளவேண்டியிருக்கப் பாடப் புத்தகத் துறையில் தலையிடுவது பொருந்தாது. இம்முயற்சியில் அரசு ஈடுபடுவது எதிர்காலக் குடிமக்களாகிய இளஞ்சிறுவர்க்கு— மெல்லிய இதயங்களுக்குப் புரியும் இடர்ப்பாடு என்றே கருதுகின்றோம். எனவே மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மனத்தில் கொண்டு இம்முயற்சியை உடனடியாகக் கைவிடுமாறு அரசினரை விரும்பிவேண்டிக் கொள்கிறோம்.

பொறாமை ஓர் ஆராய்ச்சி

அமைதியான வாழ்க்கைக்கு வழி என்ன?
பொறாமைக் குணத்தை விட்டொழியுங்கள்
பொறாமை எண்ணம்—
குணத்தைக் கெடுக்கும்! மதிப்பைக் குறைக்கும்!
இதயத்தை எரிக்கும்! இன்பத்தை அழிக்கும்!
இதிலிருந்து மீள்வது எப்படி?

பொறாமையை ஒழிப்பது எப்படி? உங்களுக்குள் ஒடுங்கி உங்களையும் அழித்து உங்களைச் சார்ந்தோரின் முன்னேற்றத்தையும் தடுக்கும் பொறாமையை அழிப்பது எப்படி?

மனித வாழ்வின் அழிவுச் சக்திகளில் ஒன்று பொறாமை. பொறாமைக்கு இலக்காகின்றவர்களை மட்டும் அது அழிக்க முயலுவதில்லை. பொறாமை உடையவர்களையும் அது அழித்து விடுகின்றது. பொறாமை போன்ற குணங்களை நீக்குவது எளிதான செயலல்ல.

உறவு மாறுகின்றபோதும், அன்பு அகலுகின்ற போதும், பொறாமை எழுகின்றது. இருவருக்கே உரிய அன்பில், உறவில் மூன்றும் ஆள் எழுகின்றபோது, அங்குப் பொறாமைத் தீ கொழுந்துவிட்டெரியத் துவங்குகின்றது.

பொறாமை என்றால் என்ன? உங்களிடம் பொறாமை எவ்வாறு அமைந்துள்ளது என்று தெள்ளத் தெளிவாக உள்ளத் துணிச்சலுடன் பிரித்துப் பார்த்தால் ஒழிய நீங்கள் உங்கள் வாழ்வில் திறமையான வகையில், தீவிரமான முறையில் பொறாமையை ஒழிக்க முடியாது.

மனித இயல்பின்படி தனிப்பட்ட அனுபவங்களாலும் பொறாமைக் குணம் உண்டாகின்றது.

சில மனிதர்கள் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மட்டும் பொறாமை உடையவர்களாக இருப்பார்கள். ஏனெனில், அவர்கள் அகத்தின் அடித்தளத்தில் பொறாமையைப் புதைத்து வைத்து இருப்பவர்கள்.

தான் திருமணம் புரிய எண்ணிய பெண்ணை மற்றொருவன் மணந்து கொள்வதாலும், தனக்குக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வை, வேறொருவன் அடைவதாலும், அல்லது இது போன்று-தான் தனக்கு என்று எதிர்பார்த்த வேறு ஒருவருக்குக் கிடைக்கின்ற போதும், இழப்பினால் ஏற்பட்ட ஆத்திரம் அந்த மனிதன் மீது பொறாமையாக உருவெடுக்கின்றது.

இதுபோன்று, உங்களுடைய

வாய்ப்பை, நீங்கள் அடையவேண்டிய தகுதியை, பதவியை, பொருளை மற்றொருவர், நீதி நேர்மைக்குப் புறம்பான வழியில் கூட அடைந்துவிடும் நிகழ்ச்சிகள் உங்கள் வாழ்க்கையிலும் நடைபெறுவதுண்டு. அவைகள் உங்களுடைய உள்ளத்தையும், உணர்ச்சியையும், ஆர்வத்தையும் வெகுவாகப் பாதிக்கவும் செய்யும். இந்த நிலைதான் பொறாமை என்னும் பொல்லா நெருப்பைக் கொழுந்து விட்டெரியச் செய்கின்றது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், இவ்வாறான இழப்புகள் ஏற்படுகின்றபோது, நீங்கள் உங்களுடைய உள்ளத்தில் பொறாமையைக் கொண்டு விட்டீர்களேயானால், அதுதான்—அந்தப் பொறாமைதான் உங்களுக்குப் பெருங் கெடுதிகளை உண்டாக்கும். உங்களுடைய நடத்தையையும், குணத்தையும் பழுதுடையதாக்கி உங்களுக்குள் உங்களையே நாணயமற்றவர்களாகச் செய்துவிடும்.

உங்களை நீங்களே சீர்தூக்கிப் பாருங்கள். எத்தனை வழிகளில் நீங்கள் உங்களுள் எழுந்த பொறாமையுடன் போராடி அதை வெற்றி கொண்டிருக்கிறீர்கள். அல்லது எத்தனை முறை அதனிடம் வீழ்ந்துபட்டிருக்கின்றீர்கள் என்பதை நீங்களே ஆராய்ந்து பாருங்கள்.

நீங்கள் உங்களுடைய பொறாமையை முதலில் ஒளிவுமறைவின்றி உணர வேண்டும். உங்களுடைய உணர்ச்சிகளை ஆய்வு எண்ணத்தோடு உணர்தல் எளிதான செயலன்று. உங்களுடைய கட்டுப்பாட்டினையும் மீறி, அறிவு தடுமாறி உங்களை ஆளும்படி சில தீய உணர்ச்சிகளுக்கு இடங் கொடுத்ததற்காக, அமைதியான நேரத்தில் நீங்கள் வெட்கப்படவில்லையா?

உன் மனத்திற்குத் துன்பமளிக்கும் உணர்ச்சிகளில் தலையாயது பொறாமை. பொறாமை கொண்டவன், பிறருடன் மட்டும் சண்டையிட்டுக் கொள்வதில்லை, அவன் தனக்குள் தன்னோடும் சண்டை போட்டுக் கொள்ளுகின்றான். இவைகள் மட்டுமின்றி, பொறாமையால் சாதாரண மனித வாழ்வுகள் கூட இல்லாமல் அழிந்து விடுகின்றது.

மற்றவர்களின் தகுதிக்கேற்ற மதிப்பைக் கொடுக்க முடியாதவர்களாகவும், மற்றவர்களின் நற்பணியையும், உயரிய புகழையும் போற்ற முடியாதவர்களாகவும் பொறாமை கொண்டவர்களாகவும் இருக்கின்றார்கள்.

நீங்கள் பொறாமை உணர்வு சார்ந்தவர்களாக இருந்தால், முதலில் நீங்கள் மற்றவர்களின் திறமையைப் போற்றத் தெரிந்துகொள்ள வேண்டும். மற்றவர்களின் நற்செயலை, நற்பணியைப் போற்றிப் பழகிக் கொள்ள வேண்டும். அவர் யார், எந்த நிலையில், தரத்தில் இருக்கின்றார் என்று பார்ப்பதைவிட்டு, அவர் என்ன செய்கிறார்; என்ன சொல்லுகின்றார் என்பதையே நோக்கவேண்டும். ஒருவரின் தரத்தையும் திறனையும் தனித்தனியே பிரித்து எடைபோடப் பழகிக் கொண்டீர்களேயா

ஞல் பொறாமை உங்களிடம் குடி கொண்டிருக்க முடியாது.

உண்மையான கலைஞன், மற்றொரு கலைஞன் தன்னைவிட சிறந்த கலையாற்றலுடையவனாக இருக்கின்றான் என்பதற்காகப்பொறாமை கொள்ளவே மாட்டான். சிறந்த கலையாற்றலைப் போற்றவும், அக்கலையாற்றலை மதிக்கவுமே செய்வான்.

வாழ்வை அமைத்துக்கொள்வதில் கூட்டுறவிற்கு உரிய இடம் கொடுக்கப்பட வேண்டும். ஊரோடு ஒட்டி வாழ்தலே, உயரிய வாழ்வினை அமைக்கும். வியாபார ரீதியில் போட்டி என்பது தேவைப் பட்ட ஒன்றாக இருந்தாலும், வியாபார வெற்றிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் போட்டியைவிட கூட்டுறவு மிகவும் தேவையானது.

போட்டி என்பது—போட்டியாளர்களுக்குப் பெரும்பாலும் வெற்றியைவிடத் தோல்வியையே தந்திருக்கின்றது.

கூட்டுறவோ நல்ல வழிகளையும், சிறந்த பரிசுகளையும் ஒன்றுபடுத்தி உருவாக்கி ஒவ்வொருவருக்கும் அளிக்கின்றது.

விளையாட்டுக் குழுக்களில், குழுவின் உறுப்பினர் ஒருவர்மீது பொறாமை கொண்ட மற்றொருவர் இருப்பாரானால், அந்தக் குழுவில் முழு ஒற்றுமையும் கூட்டுறவும் வெற்றியும் இருக்காது என்பது தெளிவானது. மற்றவர்களுடன் கூட்டுறவு கொண்டு ஒரு காரியத்தில் ஒன்றுபட்டிருந்தால்தான் வெற்றி நிச்சயம். கூட்டுறவு பொறாமையின் சக்தியை அழித்து, பொது நலத்தை வளர்த்து நன்னலம் புரியும்.

மனிதாபிமானத்தை எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு வளர்த்துக்கொள்ள வேண்டும்.

“ மற்றவர்களின்மேல் ஆட்சி புரிய சரியான செயல் அன்பு காட்டுதல் ” என்கிறார் கவிஞர் கதே.

ஒருவர்மீது கொண்ட பேரன்பின் காரணமாக, மற்றவர்மீது பொறாமை எழுகின்றது என்று பொறாமை உள்ளத்தினர் புகலுவார்கள். உண்மையில் அன்பினால் எழுவதல்ல பொறாமை. அந்த அன்பினால் தானடையும் நன்மைகளை இழந்துவிட நேரிடுமோ என்ற சுயநல அச்சத்தால்தான் உருவாகின்றது பொறாமை.

பொறாமை என்பது என்ன என்பதை நீங்கள் உணராதவரை பொறாமை உங்கள் வாழ்வை அழித்துக் கொண்டிருக்கும். “ உண்மையான அன்பு நம் அச்சங்களைக் களைந்து எறிகிறது ” என்று பைபிள் கூறுகின்றது.

பொறாமை படிந்திருப்பவனின் இதயம் தூய்மையாக இருப்பதில்லை. எப்பொழுதும் அவன் தன்னைப்பற்றிச் சிந்திப்பதை விடுத்து, அடுத்தவர்களைப்பற்றியே அவர்கள் வளர்ச்சி பற்றியே வயிறெரிந்து கொண்டிருக்கிறான். பொறாமைத் தீ தன்னையே கருக்கி விடும் என்பது பலருக்குத் தெரிவதில்லை. பொறாமைக் குணம் சில வேளைகளில் சிலருக்கு வெற்றியைக் கூடத் தரலாம். ஆனால் அது நிரந்தரமல்ல.

எனவே பொறாமையெனும் தீயி லிருந்து மீள—வாழ்க்கையில் முன் னேற—இதயத்தில் அன்பின் ஊற்றுப் பெருக கீழ்க்கண்ட முறைகளைக் கடைப்பிடியுங்கள்.

1. பிறர் வளர்ச்சி கண்டு பொறாமை கொள்ளாது அவர்களைப் போல் நாமும் வளரவேண்டும் என்பதற்கான முயற்சியில் ஈடுபடுங்கள்.

2. அடுத்தவருக்குக் கிடைக்கும் உரிய மரியாதையை அற்பத்தனமாகக் கருதாமல் பெருந்தன்மையோடு மதிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

3. அழகு இயற்கையின் சீதனம்-அறிவு சூழ்நிலையைப் பொறுத்து வளர்வது—இவை இரண்டும் உள்ளவர்களைப் பார்த்து பொறாமை கொள்வது உள்ள எழிலையும்-இருக்கும் அறிவையும் இழந்துவிடச் செய்யும்.

4. எப்பொழுதும் மகிழ்ச்சி, எதிலும் முயற்சி, பாராட்டும் பண்பு, போலித்தனமில்லாத அன்பு இவைகள் அனைத்தையும் நீங்கள் கடைப்பிடிக்க முயற்சிப்பீர்களேயானால் நீங்கள் நூறு வயது வரை வாழலாம்-பிறர் மதிக்க முன்னேறலாம்.

ஆதாரம். 'சைக்கலாஜிஸ்ட்'

—"முத்தாரம்"

[51-ஆம் பக்கத் தொடர்ச்சி]

கலிபோர்னியாவில் 'ஃபொன்டானா நகரில் இருக்கும் கெய்ஸர் ஸ்டீல் கம்பெனி ஆலைக் கழிவு நீரைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்துகிறது.

இந்தத் தொழிற்சாலையில் பலரகமான இயந்திரங்கள் இருக்கின்றன. ஒரு இயந்திரத்தைவிட மட்டமான தண்ணீரை இன்னொரு இயந்திரம் ஏற்கும். அதைவிட மட்டமான தண்ணீரை அடுத்த படியில் இருக்கும் இயந்திரம் ஏற்கும். இவ்வாறு கழிவு நீர் அங்கு படிப்படியாகப் பயன்படுத்தப்படுகிறது.

ஆயினும் பெரும்பாலான ஆலைகள் தண்ணீரின் கணிசமான பகுதியைக் கழித்துவிடுகின்றன. அவ்வாறு செய்யாவிடில் தண்ணீரில் சேர்ந்த உப்புகள் ஆலைகளிலேயே தங்கிவிடும்.

பொறியியல் வல்லுநர்களும் விஞ்ஞானிகளும் புதிய முறைகளைச் சோதிப்பதிலும் கண்டுபிடிப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர். ஏற்கெனவே இவர்கள் தண்ணீரை வைத்து விந்தைகள் பல புரிகின்றனர். ஆய்வுக்கூடங்கள் இன்னும் எவ்வளவோ வியப்புகளைத் தரப்போகின்றன.

———

Phone : 24544 Post Box No. 1818

Association Publishing House

'ஆரம்பக் கல்வி' நிலையம்

94/95, New Street, Mannady, Madras-1.

ஆரம்பப் பள்ளிகளுக்குரிய எமது பாடப் புத்தகங்கள்

இரண்டாம் வகுப்பு

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
சிறுவர் வரலாறு	0·50	—	—
சிறுவர் பூகோளம்	0·60	—	—
சிறுவர் கணக்கு நூல்	0·75	—	—
இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்	0·40	—	—

மூன்றும் வகுப்பு

சிறுவர் வரலாறு	0·60	—	—
சிறுவர் பூகோளம்	0·60	—	—
சிறுவர் கணக்கு நூல்	0·87	87	18—5—66
இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்	0·50	—	—

(3-வது பூகோளம் ஜில்லாவாரியாக வெளியிட்டிருக்கிறோம்.)

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி

நான்காம் வகுப்பு

சிறுவர் வரலாறு	0·87	11	18—5—66
சிறுவர்-பூகோளம்	0·62	18	19—5—66
சிறுவர் கணக்கு நூல்	1·25	3	24—5—67
இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்	0·75	6	18—5—66

(4-வது பூகோளம், சரித்திரம் ஜில்லாவாரியாக வெளியிட்டிருக்கிறோம்.)

ஐந்தாம் வகுப்பு

சிறுவர் வரலாறு	1·00	42	18—5—66
சிறுவர் பூகோளம்	1·00	19	18—5—66
சிறுவர் கணக்கு நூல்	1·50	4	17—5—67
சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம்	1·25	9	18—5—66

உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்குரிய எமது பாடப் புத்தகங்கள்

ஆறும் வகுப்பு

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
மாணவர் வரலாறு	1·00	54	18—5—66
புதுமுறை கில நூல்	2·00	13	24—4—68

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
புதுமுறை சங்கக் கணிதம்	1·50	50	18—5—66
பொது விஞ்ஞானம்	1·25	25	18—5—66
அறிவுச்சுடர் (தமிழ் துணைப்பாட நூல்)	0·62	22	18—5—66
Mother India Supplementary Reader (ஆங்கிலத் துணைப்பாட நூல்)	0·50	49	18—5—66

ஏழாம் வகுப்பு

புதுமுறை வரலாறு	1·50	18	17—5—67
புதுமுறை நில நூல்	1·50	4	24—5—67
புதுமுறை சங்கக் கணிதம்	1·75	4	24—5—67
பொது விஞ்ஞானம்	1·50	15	17—5—67
மேனாட்டு இளைஞர் (தமிழ்த் துணைப்பாட நூல்)	1·00	7	17—5—67
Mother India Supplementary Reader (ஆங்கிலத் துணைப்பாட நூல்)	0·60	9	17—5—67

எட்டாம் வகுப்பு

புதுமுறை வரலாறு	1·80	36	17—5—67
புதுமுறை நில நூல்	1·80	40	17—5—67

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
புதுமுறை சங்கக் கணிதம்	2·00	4	24—5—67
பொது விஞ்ஞானம்	2·00	4	24—5—67
நம் நாட்டு இளைஞர் தமிழ்த் துணைப்பாட நூல்	1·00	7	24—4—68

கணிதம் கற்பிக்கும் முறை

ஆசிரியர் : லீலா. பார்த்தசாரதி, பி.ஏ., எல்.டி.,

	2·00	2	5-7-'61

(ஆசிரியர்களுக்குத் தக்க கமிஷன் உண்டு.)

Association English Primer III Class 0·60
Association English guide IV Class 0·40
Association English guide V Class 0·50

புதுமுறை சங்க வாய்பாடு

100 பிரதிகள் 9·00

HIGH SCHOOLS

உயர்நிலைப் பள்ளிகளுக்கு

GENERAL SCIENCE

பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : பி. வி. நாகராஜன், பி.ஏ., எல்.டி.

ஒன்பதாம் வகுப்பு	1·75	33	18-5-'66

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
பத்தாம் வகுப்பு	2·00	56	17-5-'67
பதினோராம் வகுப்பு	2·80	23	24-4-'68

MATHEMATICS

புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர் : **பி. வி. நாகராஜன்,** பி.ஏ., எல்.டி..

பத்தாம் வகுப்பு	2·50	6	24-5-'67

புதுமுறை நிலநூல்

ஆசிரியர் : **R. பத்மநாபன்,** எம் ஏ., பி.டி.,

ஒன்பதாம் வகுப்பு	2·00	33	7-5-'69
பத்தாம் வகுப்பு	2·50	60	17-5-'67
பதினோராம் வகுப்பு	3·00	28	24-4-'68

புதுமுறை வரலாறு

ஆசிரியர் : **வி. எஸ். இராகவன்,** பி.ஏ., பி.டி.,

ஒன்பதாம் வகுப்பு	2·00	33	7-5-'69
பத்தாம் வகுப்பு	2·00	59	17-5-'67
பதினோராம் வகுப்பு	2·50	24	24-4-'68

திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

ஆசிரியர்கள் : த. சே. உமாபதி, எம்.ஏ., எல்.டி.,
புலவர் **தணிகை உலகநாதன்**

பத்தாம் வகுப்பு	2·25	45	17-5-'67

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி

TAMIL GRAMMER

இலக்கணம், கட்டுரை, மொழிப் பயிற்சி

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனுர்

ஒன்பதாம் வகுப்பு	2·00	28	7-5-'69
பத்தாம் வகுப்பு	2·00	5	24-5-'67
பதிேைாராம் வகுப்பு	2·00	20	25-4-'68

தமிழ்த் துணைப்பாட நூல்

உரிமைக் குரல்

ஆசிரியர் : வித்துவான் வே. வேதாசலம்

ஒன்பதாம் வகுப்பு	1·25	28	7-5-'69

மருத்துவ மேதைகள்

ஆசிரியர் : வித்துவான் வே. வேதாசலம்

பதிப்பாசிரியர் : புலவர். தணிகை உலகநாதன்

பத்தாம் வகுப்பு	1·25	49	17-5-'67

உமாபதி உரைநூல்

மூன்றும் வகுப்பு	0·45	—	—
நான்காம் வகுப்பு	0·55	—	—
ஐந்தாம் வகுப்பு	0·65	—	—
ஆறும் வகுப்பு	1·00	—	—
ஏழாம் வகுப்பு	1·25	—	—

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்,

(ஆரம்பக்கல்வி நிலையம்)

194/95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை-1.

Edited, Printed and Published by P. VEERARAGHAVAN, at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.